மகளிர் வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
இருவர்களுக்கான
தெரிவுகளுக்கு
* சோபனா *
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 05 வியாழக்கிழமை (21 - 07 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 235

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
* சோபனா *
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

### வன்செயல்களைக் காரணம் காட்டி

## இறுதி நேரத்தில் தேர்தலை ஒத்திவைக்க அரசு திட்டம்?

கொழும்பு, ஜூலை 21

வாக்களிப்பு தினம் நெருங்கும் சமயத்தில் தேர்தல் வன்செயல்கள் அதிகரிப்பின் பொதுத்தேர்தலை ஒத்திவைக்கும் யோசனை ஒன்று அரசுக்கு இருப்பதாக கொழும்பில் பலத்த வதந்தி அடிபடுகிறது.

இதுபற்றி சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவிடம் கேட்டதற்கு அவர் சொன்னதாவது:

"இப்போது தான் இதுபற்றி முதல் தடவையாகக் கேள்விப்படுகிறேன். திட்டமிட்டபடி இரு தேர்தல்களும் நடத்தப்படும் என்று ஜனாதிபதி திரும்பக் கூறிவருகின்றார். நாடாளுமன்றத் தேர்தலை அவர் முதலில் வைக்கின்றார். மக்களின் மனநிலையை தம்மை முன்வைத்து அறிவதை அவர் தவிர்த்து விட்டார்.

"மக்களின் உண்மையான மனநிலையை அரசு அறிந்து கொள்ள வேண்டுமானால் நிச்சயம் அரசு தோற்கும் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

"நிமனப் பத்திரங்கள் தாக்கல்செய்யும் தினமன்று இடம்பெற்ற வன்செயல்கள் மற்றும் இனி இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் வன்செயல்கள் பொதுத் தேர்தலை ஒத்திவைக்கும் யோசனையை அரச தரப்பில் ஏற்படுத்தி இருக்கலாம்.

ஐ.தே.க. விரக்தியடைந்த நிலையில் உள்ளது நாம் அறிந்ததே. ஆனால் பொதுத்தேர்தலை ஒத்திவைக்க மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்." — என்று அவர் தெரிவித்தார். (உ-எ)

### குருநகர் மீனவரை விடுவிக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 21

மண்டைதீவுக் கடற் பகுதியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மீனவரை விடுதலை செய்வது தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் நேற்று பேச்சு நடத்தினார்கள்.

தமிழகத்தில் இருந்து திரும்பி, குருநகரில் வசித்து வந்த ம. சந்திரகுமார் என்ற மீனவர் நேற்று முன்தினம் மண்டைதீவுக் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே. (இ-3)

## விஜேதுங்கவின் கூட்டத்தில் மேடை இடிந்து விழுந்தது!

### 6 பேர் காயம்; டி.பியின் கதிதெரியவில்லை

கொழும்பு, ஜூலை 21

இரத்தினபுரி மாவட்டம்— கொலன்னவில் நேற்று ஜனாதிபதி விஜேதுங்கா கலந்து கொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் மேடை இடிந்து விழுந்தது.

இதனால் குறைந்தது ஆறு பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் அதிரடிப் பொலிஸ் படையைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி விஜேதுங்க மோட்டார் வாகனம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டாரென, இச்சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி விஜேதுங்கா காயமடைந்தாரா என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை.

காயமடைந்தவர்கள் அனைவரும் கொலன்னே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இசைநிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டிருந்தபோதே மேடை இடிந்து விழுந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது. இறுதியில் கூட்டம் கைவிடப்பட்டது என்று பி.பி.ஸி. சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

1989 - 90 வன்செயல் காலத்தில் காணமற்போனதாகக் கூறப்பட்ட பலரின் எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்ட சூரியகந்த கொலன்னே தொகுதியில் தான் உள்ளது. (உ-எ-6)

### அனுமதி அட்டை வந்து சேர்ந்தது

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சி.ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று வந்துசேர்ந்தன.

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'மாஹோ' கப்பலில் இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளுடன் வினாத்தாள்களும் எடுத்துவரப் பட்டன. (உ-3)

# வல்லையில் இரு பொம்மர்கள்

# நேற்று அகோர குண்டுவீச்சு!

## தலை பிளந்து ஒருவர் பலி பலர் காயம்; வீடுகள் சேதம்

வல்வெட்டித்துறை, ஜூலை 21

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்று இரு பொம்மர்கள் சுமார் ஒரு மணி நேரம் வட்டமிட்டு கண்மூடித்தனமாக நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் ஒருவர் தலை பிளந்து மரணமானார், மற்றொருவர் படுகாயமடைந்தார், இன்னும் சிலர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

குடியிருப்புகள் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சுக்களினால் பொதுமக்களின் பல வீடுகள் சேதமடைந்தன, கால்நடைகள் பலவும் உயிரிழந்தன.

நேற்று முற்பகல் 10.30மணி முதல் 11.30 மணி வரை இடைவெளி விட்டு இரு தடவைகள் வந்த பொம்மர்களும் ஒரு ஹெலியும் தாக்குதலில் ஈடுபட்டன.

புக்காரா விமானம் வட்டமிட்டு நோட்டமிட்டு சென்றதை தொடர்ந்தே பொம்மர்கள் குண்டு வீச்சுக்களை நடத்தின. ஹெலி பரவலாக கலிபர் தாக்குதலை நடத்தியது.

ஊரிக்காட்டுப் பகுதியிலிருந்து வல்வைச் சந்தி கரையூர் கரையோரப் பகுதி குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலினால் அப்பகுதியில் பெரும் பதற்றமும் குழப்பமும் நிலவியது.

சுமார் எட்டுக்கும் அதிகமான குண்டுகள் இப்பகுதிகளில் வீசப்பட்டன.

வல்வெட்டித்துறைச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சினால் தொண்டமானாறு நாட்டுப்புலத்தைச் சேர்ந்த நாராயணசாமி பாலசுப்பிரமணியம் (45 வயது) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார். அதே இடத்தைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் ஜெயதாஸ் (28 வயது) என்பவர் படுகாயமடைந்து வல்வை இந்திராணி அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொம்மர்கள் தாக்குதல் (6 ஆம் பக்கம் பார்க்க)

## நடுநிலைமை வகிப்பதற்கு பிரேமா குடும்பம் முடிவு!

கொழும்பு, ஜூலை 21

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் குடும்பத்தினர் ஐ.தே.கவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யமாட்டார்கள்.

அவர்கள் நடுநிலைமை வகிப்பர்.

அக்குடும்பத்திற்கு நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

பொ.ம.ஐ.முவின் தலைவர்களாக உள்ள இரண்டு விதவைகளும் மறைந்த பிரேமதாஸா குடும்பத்தினர் மீது அதிக அன்பும் கருணையும் காட்டி வருவதன் காரணமாகவே ஹேமா பிரேமதாஸா எதிர்வரும் பொதுத் தேர்தலில் நடுநிலைமை வகிக்க முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விதவைகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள நெருக்கமான தொடர்பு காரணமாக உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு வழக்கில் தமக்கு வழக்குச் செலவுத் தொகையாக சிறிமாவோ செலுத்த வேண்டிய 17 லட்சம் ரூபா பணத்தை வேண்டாம் என்று ஹேமா கூறிவிட்டார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

### வல்லைவெளியிலும் ஹெலி நேற்று கலிபர் தாக்குதல்

அச்சுவேலி, ஜூலை 21

இடைக்காடு, தம்பாலை, வல்லைவெளிப் பகுதிகளில் நேற்று பரவலாக ஹெலி தாக்குதல் நடத்தியது.

இடைக்காடு, தம்பாலை, அச்சுவேலிப் பகுதிகளை சுற்றி பல தடவைகள் வட்டமிட்ட ஹெலி தம்பாலை இடைக்காடு பகுதிகளில் பொது மக்களின் வீடுகளை நோக்கியும் வல்லைவெளியில் சென்று கொண்டிருந்த வாகனங்களை நோக்கியும் 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

இதேவேளை நண்பகல் 11 மணியளவில் வானில் வட்டமிட்ட புக்காரா விமானமும் பொம்மர் ஒன்றும் வட்டமிட்டு தாக்குதல் நடத்தவதுபோல் குத்திப் பதிந்து மக்களை மிரட்டிச் சென்றன.

ஹெலித் தாக்குதலினால் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் வல்வை சிதம்பரக் கல்லூரியின் கூரைகளும் சேதமாயின. (இ-11-155)

### பண்ணைக் கடலில் மீனவர் படையினர் சூட்டுக்கு காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

நேற்றுக் காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம், கொட்டடி — பண்ணைக் கடற் பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களை நோக்கி மண்டைதீவிலிருந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆனைக்கோட்டை சாவற்கட்டைச் சேர்ந்த அல்பிரட் சந்திரகுமார் (வயது 19) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவர். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## தேர்தல் வேலைகளுக்காக தீவகத்துக்கு 50 பொலீஸார்

கொழும்பு, ஜூலை 21

யாழ். மாவட்டத்தில் உள்ள தீவுப் பகுதிகளில் தேர்தல் பணிகளுக்காக முதலில் ஐம்பது பொலீஸாரை அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பொதுத் தேர்தலுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் இக்னேஷியஸ் வைகரத்தினம் தெரிவித்தார்.

தற்போது ஊர்காவற்றுறையைத் தவிர்ந்த காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் புங்குடுதீவுகளில் பொலீஸார் இல்லை.

எனினும் தீவுப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் பொலீஸார் அங்குள்ள பாதுகாப்புப் படைப் பிரிவுகளுடனே தங்கியிருப்பர் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் தீவுப் பகுதிகளில் பொலீஸாரை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு விடுத்த வேண்டுகோளை அடுத்தே, பொலீஸ் தேர்தல் செயலகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### காங்கேசன் - பருத்தித்துறை இடையே

## இணைப்புக் கப்பல் மூலமே நரோமா பயணிகள் சேவை

வடாகுதிக்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகள் சேவையில் ஈடுபட்டு வந்த 'நரோமா' கப்பல் மீண்டும் காங்கேசன்துறையுடன் தனது சேவையை நிறுத்திக் கொண்டது.

பயணிகள் பருத்தித்துறைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே வேறு இணைப்புக் கப்பல் மூலமே பயணம் செய்தனர்.

முன்னர் திருமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த நரோமா கப்பல், கடந்த சில தடவைகளில் நேரடியாகப் பருத்தித்துறை துறைமுகம் வரை வந்து பயணிகளை இறக்கி, ஏற்றிச் சென்றது.

ஆனால் நேற்று நடைபெற்ற பயணிகள் சேவையின் போது அது காங்கேசன்துறையுடன் சேவையை நிறுத்தியது.

பருத்தித்துறைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகளை ஏற்றி இறக்கும் இணைப்புச் சேவையில் "கோமாரி" கப்பல் ஈடுபட்டது.

இதனால் 'கோமாரி' கப்பலில் ஏற்றிவரப்பட்ட மாமூடைகள் நேற்று பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்படவில்லை. (உ-3-173)

## 133 முன்னாள் எம்.பிக்களின் ஆயுதங்களை பெற முயற்சி!

கொழும்பு, ஜூலை 21

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த 133 முன்னாள் எம்.பிக்களிடமிருந்து, அவர்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ள ஆயுதங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வது குறித்து அடுத்த வாரத்தில் முடிவு செய்யப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆளுங்கட்சி மற்றும் எதிரணி ... 133 முன்னாள் எம்.பிக்களிடமிருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வது குறித்த பேச்சுவார்த்தைகள் தற்போது நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காபந்து அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் 91 அமைச்சர்களிடமிருந்து ஆயுதங்களை திரும்பப் பெற்றுக்கொள்ளப் படமாட்டாது என்றும் அமைச்சு அதிகாரி ஒருவர் கூறியதாக 'லங்காதீப' தெரிவித்தது. (உ-எ-6)

## ஈ.பி.டி.பி. ஒலிபரப்பு குறித்து சு.க. செயலர் கண்டனம்!

கொழும்பு, ஜூலை 21

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணத்துக்கு என்று நடத்தும் "மக்கள் குரல்" நிகழ்ச்சி மூலம் ஈ.பி.டி.பி. அமைப்பு பொது மக்கள் ஐக்கிய முன்னணியையும் ஏனைய தமிழ்க் கட்சிகளையும் தாக்கி வருகிறது.

சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தீவுப்பகுதிகளை நிர்வகித்து வரும் ஆயுதபாணிகளான ஈ.பி.டி.பியினர் அங்கு ஏனைய தமிழ்க் குழுக்களை தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கின்றார்கள் இல்லை என்றும் அவர் கூறினார்.

தேர்தல் சுவரொட்டிகளைக் கிழித்தெறியும் பொலீஸார், ஜனாதிபதி மற்றும் பிரதமர் படங்களுடன் கூடிய சுவரொட்டிகளைக் கிழித்தெறிவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (இ-எ-6)

### காங்கேசனில் வைத்து

## சரக்குக் கப்பல்களிலும் படையினர் கடும் சோதனை

யாழ்ப்பாணம், ஜூலை 21

காங்கேசன்துறைக்கு செல்லும் சரக்கு கப்பல்கள் கடற்படையினரால் கடும் சோதனைக்குட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காங்கேசன்துறை வந்து சேர்ந்த 'மாஹோ' கப்பலில் எடுத்து வரப்பட்ட— கல்வித்திணைக்களத்துக்கான— பொருட்கள், காகிதாதிகள் ஆகியவற்றை கடற் படையினர் துருவித் துருவி சோதனை செய்தனர்.

பரீட்சைக்காக எடுத்து வரப்பட்ட காகிதாதிகள் கூட உடைத்து, கிழித்து சோதனையிடப்பட்டதாகவும்—

பல பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை—

திருகோணமலையில் இருந்து மா ஏற்றிக் கொண்டு நேற்றுக் காலை காங்கேசன்துறை வந்த 'கோமாரி' கப்பலும் கடற் படையினரால் கடும் சோதனையிடப்பட்டது.

### முச்சந்தி முரளி



மேடையும் சரிந்து ... போச்சு...! டி.பியாருக்கு ... சரியில்லையோ... ?

# தெற்கு அரசியலில் பிக்குகளின் ஆதிக்கம் குறைந்து வருகிறதா?

கொழும்பு, ஜூலை 21

தென்பகுதியில் நெருக்கடியான பொதுத்தேர்தல் ஒன்று மீந்துகொண்டிருக்கும் இச்சமயத்தில் பௌத்த மதகுருமாரின் அரசியல் ஆதிக்கம் குறைந்து வருவதாகவும் —

இவர்களின் சிங்களத் தேசியவாத அபிப்பிராயங்களில் கடுமை குறைந்து வருவதாகவும் அமெரிக்க செய்தி ஸ்தாபனம் ... கிறது.

பௌத்த மதகுருமாரின் ... தரவை பாரம்பரியமாக நாடிவரும் ஐக்கிய தேசியக் கட்சி, தற்போதைய யுத்தத்துக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் சிறிதளவு ஊக்கமே காட்டுவதாக கண்டிக்கப்பட்டு வருவதாக ஏ.பி. செய்தி நிறுவனக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அக்கண்ணோட்டத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

... நிலைப்பாட்டுடன் கொண்டுள்ள பௌத்த மதகுருமாரின் செல்வாக்கைத் தவிர்த்தால், சிங்கள அரசியல் வாதிகள் தமிழருக்கு நல்ல ஒரு தீர்வை வழங்க முடியும்— என்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமூகவியல் விஞ்ஞானி டெனிஸன் பெரேரா தெரிவித்தார்.

சிறப்புச் சலுகைகளுக்காக பாரபட்ச அரசியலை நடத்தும் பௌத்த மதகுருமார் மீது மக்கள் நம்பிக்கை இழந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பௌத்த மதகுருமார் மத்தியில் புதுவித தலைமுறை ஒன்று தோன்றியுள்ளதால் பழமைவாத பௌத்த மதகுருமார் மனம் நொந்துள்ளனர்.

இந்த இளம் பௌத்த பிக்குகள் மத சார்பற்ற பல்கலைக்கழகங்களில் படித்து வருகிறார்கள்; நீண்ட முடியை வளர்க்க ஆரம்பித்துள்ளார்கள்; வெறுங்காலுடன் நடப்பதற்கு பதிலாக செருப்பு அணிய ஆரம்பித்துள்ளனர்; கறுப்புக் கண்ணாடிகளும் அணியத் தொடங்கியுள்ளனர்.

1989 இல் தென் இலங்கையில் இடம்பெற்ற தீவிரவாத

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிகண்டியில் வீற்றிருக்கும்
குழந்தை யேசு
# ஆலயத் திருவிழா

13-07 94 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவதின வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அருள் உரைகள்:-
பிதா லூயிஸ் பொன்னையா அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று (21-07-94) வியாழக்கிழமை மாலை
நற்கருணை வழிபாடுகளும்
22-07-94 காலை 6-30 மணிக்கு
கூட்டுத் திருப்பலிப் பூசையும்
இடம்பெறும்.

பருத்தித்துறை பங்குத் தந்தை
பிதா பி. எம். இம்மானுவேல்
தலைமையில் அனைத்து வழிபாடுகளும் நடைபெறும்.

குழந்தை யேசு
ஆலய பங்கு மக்கள்

(32004)

## ஆலயங்களில்

எழுதுமட்டுவாழ் விழுவளை மீனாட்சி அம்மாள் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறும். தீர்த்தோற்சவம் நாளை இடம்பெறும். (ஒ)

★ ★ ★

தில்லைவனம் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று பிற்பகல் 4 30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும். (ஐ-17)

## பரீட்சை

கொழும்பு, ஜூலை 12
தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி I, II பரீட்சைகள் அடுத்த மாதம் 23 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடத்தப்படும் என்று தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் கலாநிதி இ. சரீபவசம் அறிவித்துள்ளார். (உ-8)

## கணனிப் பயிற்சி: விண்ணப்பத் திகதி ஒத்திவைப்பு

கொழும்பு ஜூலை 22
கணனிப் பயிற்சிநெறிக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு அறிவித்தல் விண்ணப்பங்களை அத்தளது.
தப் பகுதி செயலர்களிடம் ஒப்படைக்குமாறும் அமைச்சு அறிவித்துள்ளது (உ-3)

# வேலை வாய்ப்புக்கள்

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர் அவசரமாகத் தேவைப்படுகின்றனர். அனுபவத்திற்கேற்ப உதவித் தொகை வழங்கப்படும். ஆண் பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். தகுதியுள்ளவர்கள் 22-07-94 அன்று தாவடியிலுள்ள பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதி அலுவலகத்துக்கு காலை 9-30 மணிக்கு சான்றிதழ்களுடன் சமுகம் கொடுக்கவும்.

## வேலை வாய்ப்புக்கள்

01) ரீ மேக்கர் (தேநீர் தயாரிப்போர்)
02) சப்ளையர்
03) ஐஸ்கிறீம் வெட்டுவோர்
04) பொம்பே சுவிற்ஸ் தயாரிப்போர்
05) விற்பனையாளர்
06) காசாளர்

பகுதி பொது முகாமையாளர்
கைத்தொழில் பகுதி,
த. பொ. மே நிறுவனம்:

(இ-8770)

# A/L 96

**PURE / APP.**
Mr. P. கமலசிங்கம்
(B. Sc Hons)
ஆரம்பம்
**23-07-94**
சனி 6-30 A M
விஷனல்ஸ்
சுன்னாகம்
(7275)

## வாகனங்கள் வழங்குவதற்கான கேள்வி

கூளாவடி ஆனைக்கோட்டை,
### புற்கைதின்னிப் பிள்ளையார் ஆலயத்திற்கு

பின்வரும் வாகனங்கள் வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன. அதனை வழங்குபவர்கள் தமது கேள்விகளை 31-07-94க்கு முன் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். கேள்விகள் தனித்தனியாக வாகனத்தின் பெயரிடப்பட்ட உறையில் சமர்ப்பிக்க வேண்டும்.

1. இடபம் 2. எலி 3. குதிரை

மேலதிக விவரங்களை ஆலய நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும். வாகனம் செய்து வழங்கக்கூடிய கால எல்லையை தவறாது குறிப்பிடவும்.

-நிர்வாகம்.

(32024)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## சுகாதார தொழிலாளர் பதவிகள் வெற்றிடம்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி எதிர்வரும் 28-07-94 வியாழக்கிழமை மு. ப. 10 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது:
01-07-94 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இப்பதவி சம்பந்தமான விளம்பரத்தில் சொல்லப்பட்ட வயது எல்லை 40 லிருந்து 45 ஆக அதிகரிக்கப்படுகிறது: அத்துடன் இப்பதவிகள் நிரந்தரமானவையாகும்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்

வலி தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
20-07-94. (இ-8768)

# A/L 96

தூய - பிரயோக கணிதம்
**திரு கிருஷ்ணா**
சனி, ஞாயிறு காலை 6மணி
தாவரவியல்
**திரு. பொ. ஐங்கரநேசன்**
சனி, ஞாயிறு பிற்பகல் 2மணி
**ஆரம்பம்: 23-07-1994**
## யூனிவேர்சல்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
[இ-8640]

## ஹெல்பேஜ் ஸ்ரீலங்கா தேசிய ரீதியிலான கட்டுரைப் போட்டி

மேற்குறிப்பிட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கான கட்டுரைப் போட்டிக்கான விண்ணப்பப்படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
இக்கட்டுரைப் போட்டிக்கான முடிவு திகதி 6-8-94 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

வை. எம். சி ஏ.
யாழ்ப்பாணம்.

(இ/8771)

# அறிவித்தல்

வேலணை பல. நோ. கூ. சங்கம் (வ—து)
வேலணை பல.நோ.கூ.சங்க அங்கத்தவர்கள்.
கிளைக்குழு உறுப்பினர்கள், பொதுச்சபை
உறுப்பினர்கள், பணியாளருக்கான
கலந்துரையாடல் 23-07-1994 இல்

தமிழீழ பொது நிர்வாக சேவைப் பகுதியினரால் 23 07-94 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடாத்தப்படவிருக்கின்ற மேற்படி கலந்துரையாடலில் சங்கத்தின் சகல அங்கத்தவர்கள், கிளைக்குழுக்களின் உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொ. மாசிலாமணி வே. செல்லத்துரை
தலைவர். செயலாளர்.
வேலணை பல. நோ. கூ. சங்கம். (இ/8769)

# அறிவித்தல்

நான் எல்லோரையும் போல உங்களில் ஒருவன். அறவுடமை எல்லோரினதும் பொதுவுடமை அவ்வாறு அது எனது மனித உரிமையும் கூட. இவ்வாறு பொதுக் கடமைகளை ஏற்று பொறுப்புடன் இயங்கி வருகின்றேன்: சமூக மத்தியில் சிறப்பாக விளங்கி வருகின்றேன். மக்கள் மத்தியில் நான் உரிய சமய சமூக சம்பிரதாயங்களுடன் இருப்பதற்கு இயங்குவதற்கு வாழ்வதற்கு எதிராக யாராவது ஏதாவது குற்றவியலை உணர்ந்தால் அவை பற்றி எமது தேசிய நீதிமன்றில் பெருமதியுடைய தகுந்த முறைப்பாட்டை ஒரு மாத அவகாசத்தில் மேற்கொள்ளுமாறு இதனால் பொதுவாக எல்லோருக்கும் அறியத் தருகின்றேன்.

என்றும் உங்களுடன் உரிமை உறவுள்ள
உங்களில் ஒருவன்.

கே. எம். ஆர். தருமராஜா,
வண் - வட - கிழக்கு,
கலட்டி, யாழ்ப்பாணம்.

[32025]

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 10 | 21 |
| 09 | 07 |
| 1938 | 1990 |

### பிறின்சி சரோஜினி ஜெயராஜா

நல்லதோர் மனைவியென்றும்
நம்மரும் அன்னையென்றும்
உள்ளதோர் பிறப்பெடுத்து
உயர்வினை எமக்களித்து
வல்லதோர் பெண்மை என்னும்
வடிவினை தாங்கி எங்கள்
இல்லமோர் கோயிலாக்கி
இருந்ததை ஆட்சி செய்தாய்!!

கணவர், பிள்ளைகள்.

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை. (31987)

உடுவில் கிழக்கு
# அருள்மிகு கற்பகப்பிள்ளையார் தேர்த் திருவிழா

விநாயக அடியார்களே!

இன்று **21-07-1994** வியாழக்கிழமை
காலை 9 மணி முதல் 12 மணி வரையும்
பொதுமக்கள் ஒத்துழைப்பாலும்
பொருளுதவியினாலும்
உருவாக்கப் பெற்ற



## புதிய சித்திரத் தேர்த் திருவிழா

மிகக் கோலாகலமாக நிகழும்.
இப் புதிய சித்திரத் தேரை உருவாக்கிய
**ஸ்தபதி அராலி திரு. சி. அமரசிங்கம்**
ஆச்சாரியார் குழுவினருக்கும்
உபகரித்த பெரியோர்களுக்கும்

தேர்த்திருவிழா உபயகாரர் ஆகிய நாம் நன்றி செலுத்துவதுடன் இத் தேர்த்திருவிழாவில் சகல பெருமக்களும் கலந்து விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

**- தேர்த்திருவிழா உபயகாரர்.**

உடுவில் கிழக்கு.

அன்பளிப்பு!
★ அன்பளிப்புப் பொருள்கள் ★ வீட்டுப் பாவனைப் பொருள்கள்
(★ எவர்சில்வர் ★ அலுமினியம் ★ பிளாஸ்ரிக்)
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

## செல்லையா விற்பனை அகம்
### (செல்லா சன்ஸ் சேல்ஸ் சென்ரர்)
118 (198). காங்கேசன் துறைச் சாலை யாழ்ப்பாணம்.

**சாந்தா அழகுச் சோலை**
65, சந்தோசம் தெரு.
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

**(F)பறாங் பாதணி அகம்**
38, சந்தோசம் தெரு.
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.
[3[illegible]]

## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 20 | 21 |
| 03 | 06 |
| 1920 | 1994 |

### திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்
(காங்கேசன்துறை குருவீதியைச் சேர்ந்தவர்)

அன்பின் அகல்விளக்காய், உண்மையின் ஒளிவிளக்காய், விசுவாசத்தின் குடிவிளக்காய் வாழ்ந்து எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே உமக்கு எமது இதய அஞ்சலி.

அன்னாரின் மரணச் சடங்கிலும், சமக்கிரியைகளிலும் கலந்துகொண்டு பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்!
மருமகன், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்!

49, மவுண்ட்மேறி,
தெமட்டகொட,
கொழும்பு - 10

## 45 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தவப்பேறு: | சிவப்பேறு: |
|---|---|
| 04 | 05 |
| 05 | 06 |
| 1943 | 1994 |

### திருமதி தவமணிதேவி இராசகோபாலன்
(காங்கேசன்துறை குருவீதியைச் சேர்ந்தவர்)

அறிவின் ஒளிவிளக்காய், பண்பின் இருப்பிடமாய், பாசமிகு துணைவியாய், அன்புத் தாயாய், அன்புமிகு மருமகளாய் எம்முடன் வாழ்ந்து எம்மை மீளாத்துயரில் தவிக்கவிட்டுப் பிரிந்து சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அன்னாரின் இறுதிக்கிரியையில் கோது சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்!
அன்புக் கணவன்,
பிள்ளைகள், மாமியார்

49, மவுண்ட்மேறி,
தெமட்டகொட,
கொழும்பு - 10 (32033)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்வாய் வேவிலந்தை
# ஸ்ரீ முத்துமாரி அம்மன் இரதோற்சவ சிறப்பு மலர்

21-07-1994

# அற்புத தெய்வமாக எழுந்தருளி அடியார்க்கு அருள்மாரி பொழியும் அன்னை ஸ்ரீ முத்துமாரி

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த எட்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று இரதோற்சவமாகும்: அன்னை ஸ்ரீ முத்துமாரி இன்று காலை 9 மணிக்கு அடியவர்கள் புடைசூழ கட்டுத் தேரேறி வீதி வலம் வருவார்.

அந்தச் சிறப்பு நிகழ்வையொட்டி இந்த விசேட மலர் வெளியிடப்படுகின்றது.

சைவம்

சிவசக்தியாக இறையைப் பெண் வடிவில் வடித்து வழிபாடாற்றி வந்த பழம் பெருசமயம் சைவசமயம். இந்து நதிக்கரை நாகரிக மக்கள் கூட சக்தி வழிபாடு செய்து வந்துள்ளனர் என்பது வரலாற்று ஆசிரியர்களின் ஒரு தலை முடிவாகும்.

இத்தகைய சிவசக்தி வழிபாடு சிறப்புற அமைய பாரிய கோயில்கள் எடுத்தவர்கள் தமிழ் நாட்டை ஆண்டு வந்த பேரரசர்களான மாமன்னன்; இராசராச சோழன், இராசேந்திரன் போன்றவர்கள் திராவிட சிற்பக்கலை வல்லுநர்கள் கொண்டு அமைத்த ஆலயங்கள் தமிழ் நாட்டில் பரக்கக் காணலாம். கோயில்களை வதிதளமாகக் கொண்டே திராவிட சிற்பக்கலை பிரபல்யம் அடைந்திருக்கிறது.

பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முன்னர் குமரிக்கண்டம் கடலால் கொள்ளப்பட்ட போது [''பஃறுளியாற்றின் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள'' என சிலம்பு செப்புகிறது] இன்றைய ஈழம் தனித்தீவாக அமைந்த காலத்திலே கூட தென்னாடுடைய சிவன் இந்நாட்டிலும் கோயில் கொண்டெழுந்தருளினார் என்பது கோணேஸ்வரம், முனீஸ்வரம் நகுலேஸ்வரம் போன்ற தலங்கள் மூலம் அறியக்கிடக்கின்றது.

சிவம் வேறு சக்தி வேறு அல்லவென்பதும் இரண்டறக் கலந்த ஒன்றுதான் இறை என்பதும் ''உடையாள் உந்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி'' என்று சிவசக்தி தத்துவத்தினை திருமுறை கூறா நிற்கின்றது.

சிவனார் ஆலயங்களில் இடப்பாகத்தே அமைந்து அருட் சக்தியாக விளங்கி உமை மாதாவுக்கு தனிப் பெருங்கோயில்கள் தோற்றம் பெற்றமை வரலாற்று நிகழ்வு.

இன்றைய தமிழீழத்தின் அந்நாளைய சைவப் பெருமக்கள் தென்னாட்டுத் தலங்களுக்கு யாத்திரை செய்து வழிபாடாற்றியமையும், தம் நினைவுகளை அந் நாட்டுக் கோயில்களுக்கு ஈகை செய்தமையும் இருநாடுகளுக்கும் சமய கலாசாரத் தொடர்புகள் பேணப்பட்டமையும் பதிவுகளிலிருந்து அறியக்கிடக்கின்றது.

சிதம்பரம், மதுரை ஆகிய தலங்களுக்குச் சென்று வந்த நம்மக்கள் தமிழீழத்தில் சிவசக்தி மூர்த்தங்களை எழுந்தருளச் செய்து சிறிய கோயில்களைக் கட்டி வழிபாடாற்றினர். அத்தகைய ஒரு தலமே இன்று செவ்வாயர் துயர் தீர்த்தருளும் அல்வை வேவிலந்தை முத்துமாரி அம்மை கோயில் கொண்டதலம்.

தலத்தோற்றம்

அல்வாயில் செல்வம் சீர்வரிசைகள் பெற்று விளங்கிய வீரமாப்பாணமுதலியார் மரபு அந்த மரபிலே உதித்த ஓர் அம்மையார் [வள்ளியம்மை: இவரை முத்தாச்சி என்றும் அழைப்பர்] அன்னார் ஆண்டு தோறும் மதுரை மீனாட்சி தரிசனம் செய்ய செல்வதுண்டு; இவ்வம்மையார் மதுரையம்பதியில் தங்கியிருந்தபொழுது தமக்குக் கனவிலே உரைக்கப்பட்டவாறு சிறிய அளவினதான ஓர் அம்மன் விக்கிரகத்தை எடுத்து வந்தாரென்றும், அத்திருவுருவை தம் வீட்டிலேயே வைத்து உபாசித்து வந்தாரென்றும், மீளவும் கனவுரைப்படி வேம்பும் இலந்தையும் நின்ற தமது காணியில் சிறு கொட்டில் கட்டி அம்மையை எழுந்தருள்வித்து பூசை புரிந்து வந்தார் என்றும் கர்ண பரம்பரையான கதையுள்ளது.

அம்பாள் அவ்வம்மையின் கனவில் தோன்றி தல மகிமை பெற தீர்த்தக் கிணறும் கேணியும் அமைய வேண்டிய இடங்களைக் குறியிட்டுக் காட்டினார் என்றும், அக்கனவுரைப்படியே அமைக்கப்பட்டவை தான் இன்றைய தீர்த்தக் கிணறும் தூர்ந்துபோனகேணியும் என்று கூறுவர்.

மூர்த்தி தலம், தீர்த்தம் என்கின்ற முப்பெரும் அம்சங்களும் நன்கு அமையப்பெற்ற வேவிலந்தைத் தலத்தில் தழைத்துப் பருத்து ஓங்கி வளர்ந்து குளிர் நிழல் பரப்பும் மரங்களும், நீருற்றும் அம்பிகையின் அளப்பரும் கருணைக்கு எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன. இது தெய்வீகமே.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் நல்லூர் முருகன் தலம் தாக்கத்திற்கு உள்ளான போது இத்தலம் அவர்கள் பார்வைக்குப் படாத சிறு கோயிலாக இருந்தமையினால் அழிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டது என்று கூறுவர்.

தொடக்க காலத்தில் அம்மையைக் காளியாக கற்பித்துப்பலி முதலியவற்றால் மகிழ்விக்கலாம் என எண்ணி வழிபாடாற்றி வந்திருக்கிறார்கள். மக்கள் அடிக்கடி அம்மை, கொப்புளிப்பான், சின்னமுத்து, கண்நோய் போன்ற நோய்களால் துன்புற்றபோது அம்மையின் கோபத்துக்காளானோம் என்று கருதி அந்நோய்களைத் தீர்த்தருளுபவளுமவளே என்று அம்பிகைக்கு முத்துமாரி என நாமகரணம் செய்து நேர்த்தி பல வைத்துப் பூசனை புரிந்தார்கள்.

பரிபாலனம்

அம்மன் ஆலயபரிபாலனம் பல்லாண்டுகளாக தாபிதபரம்பரையினராலேயே நடத்தப் பெற்று வந்திருக்கிறது மண்

கொம்டிக் கண்ணைக்கள் டபமாக இருந்த காலத்தில் வடமராட்சி மக்கள் அனைவரதும் நேர்த்தித் தெய்வமாக கருதப்பட்ட எங்கள் முத்துமாரி நிந்தரக் கோயிலில் கொலுவிருக்க விரும்பினாள் போலும். அறிவறிந்த சைவாபிமானிகள் சிலரின் முயற்சியால் தனியார் உடைமையாக இருந்த ஆலய பரிபாலனம் அனைத்து சைவமக்களினதும் உடைமையாக மாற்றம் பெற்றது.

ஆலயங்கள் அனைத்தும்

யாயர் அவர்களின் கண்ணுறங்காப் பணியினாலும் கர்ப்பக்கிரகம் தொடக்கம் கோபுர வாசலை வரை சுற்றிருப்பணி மூலம் திராவிட சிற்பக்கலை வாழ்வுபெற்று இலங்குகிறது.

கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், கோபுரவாயில் ஆகியவற்றின் இன்றைய பெறுமானத்தை நாம் சுற்றுக் கணித்துப் பார்க்கின் பல கோடி பெறுமதி துலங்கும். கர்பக்கிரகத்தின் புறப்பகுதியில் ''வரவர் பணி'' எனப்

களிலேயே வண்ணச்சித்திரங்களாய் வரையப்பட்டன. விதம் விதமான வாகனங்கள் உருவாக்கப்பட்டன. புதிதாக சப்பரம் செய்யப்பட்டது.

இளைஞர் செய்த நற்பணிகள்

ஆலய வரலாறு சைவ இளைஞர்களின் பங்களிப்புப் பணி என்பனபற்றி எடுத்துச் சொல்கிறது. வருடாவருடம் வரும் பங்குனி அபிஷேக விழா தீர்த்தோற்சவத்தன்று நடைபெற்று வருகின்ற இளைஞர் விழா என்பன பெரும்பணச் செலவில் நடைபெற்று வந்திருக்கிறது.

மேலும் ஆலய நுழைவாயில் சிற்ப வேடம் போன்ற இலட்சங்கள் பெறுமதி வாய்ந்த வேலைகளைச் செய்து அளித்திருக்கிறார்கள்; தற்போது அவர்கள் தலையிலே தம்பணி செய்யும் கடமையை அம்பாள் சுமத்தியிருக்கின்றாள். என்னே தாயின் அருட்பெருங்கருணை!

''இளைஞர் வழியது உலகம்'' ஆதலால் அவர்களை நோக்கி கும்பாபிஷேகமும், சித்திரத்தேரும் காத்திருக்கின்றன.

சிறப்பு நிகழ்வுகள்

அம்பிகையின் ஆலய மகோற்சவங்கள் சூழ வாழ்ந்திருக்கும் தொழில்சார் சமூக மக்கள் அனைவரினாலும் நடத்தப் பெற்றுவருவது ஆலயத்தின் சிறப்பம்சமாகும். நித்திய, நைமித்திய பூசைகள், விழாக்கள் ஒழுங்காக நடைபெறுவதும் செவ்வாய் தோறும் நடைபெறும் விசேட பூசையில் பலரை மக்கள் கலந்து கொள்வதும் மேலும் சுமங்கலிப்பூசை, கன்னியரின் தீபபூசை, பூரணை விழா என்பனவும் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

நிதிவளம்

அம்மை ஓர் அற்புத தெய்வமாக மக்களால் கருதப்படுவதால் உள்ளூரிலும் வெளி நாட்டிலும் உள்ளவர்கள் தம் உழைப்பின் சிறுபகுதியை அம்பாள் நிதியில் சேர்த்து வருவது காரணமாக ஆலயம் எவ்வித முட்டுமின்றி இனிதே நடந்தும் வளர்ந்தும் வருகின்றது.

மஹோற்சவம்

இறைவியின் ஐம்பெரும் கிருத்தியங்களையும் எடுத்து விளக்கும் மஹோற்சவம் ஆரம்பமாகி இன்று இரதோற்சவமும் நடைபெறுகிறது; நாளை தீர்த்தோற்சவத்துடன் திருவிழா முடிவடைய இருக்கிறது.

அகிலாண்டகோடிப் பிரமாண்ட நாயகியாக விளங்கும் அல்வை வேவிலந்தை முத்துமாரியம்மன் தம் அமைதியும் பேரானந்தமும் தவழும் தலமாக — அன்பும் அறமும் மிக்கொணரும் இடமாக — சமய, கலாசார பாரம்பரியத்தைக் காக்கின்ற தலமாக அமைந்திட வணங்கிப் பணி செய்து பேறடைவோமாக.

★



தேசிய சொத்து ஆக்கப்பட வேண்டும் என்ற கருத்து ஓங்கியுள்ள இன்றைய காலகட்டத்திலேயே தமது தனியுடைமை பறிபோகக்கூடாதென பகீரதப் பிரயத்தனம் செய்கின்றபோது 1867ஆம் ஆண்டிலேயே தனியுடைமையை விட்டுக்கொடுத்து பரிபாலனத்தை மக்கள் மயமாக்கிய அந்தப்பரம்பரையினர் எம்மால் மனங்கொள்ளப்பட வேண்டியவர்களே.

அல்வாயிலுள்ள நாற்பது வேளாண்குடியினர் கொண்ட சபை ஒன்றும் அச்சபையினரால் தெரிவுசெய்யப்பட்ட தர்மகர்த்தா சபையொன்றும் உருவாக்கப்பட்டதும் உறுதி செய்யப்பட்டதும் 1867 இலேயே இச்சபை நமசிவாயம் வேலுப்பிள்ளை என்ற மணிய

## மலர் ஏற்பாடு:
## ஆலயபரிபாலனசபை

காரர் ஒருவரை தாபிதபரம்பரையிலிருந்து தெரிவுசெய்தமையும் உறுதியாக உள்ளது.

அறுபது ஆண்டுகள் கழிந்தன. ஆலய வளர்ச்சி விதம்பித நிலையில் இருந்தமை கண்டு சைவாபிமானி சிலர் திரு. வ. ஆறுமுக உபாத்தியாயர் தலைமையில் நீதிமன்று சென்று வழக்குரைத்தனர். தாபித பரம்பரையில் உதித்த முருகுப்பிள்ளை என்ற பெரியவரும் இன்னும் சிலரும் பெருமனங்கொண்டு தமதுரிமையை விட்டுக்கொடுத்தனர்; இதனால் அம்பிகையின் ஆலயம் அதன் சொத்துக்கள் யாவும் 1929ஆம் ஆண்டளவில் பகிரங்க நம்பிக்கைச் சொத்தாக்கப்பட்டது.

திருப்பணிக் காலம்

காலஞ் சென்றும் நினைவழியாப் பணிபுரிந்த திரு. வ. ஆறுமுக உபாத்தியாயர் மணியகாரராக இருந்த காலம் ஆலய வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம். அக்காலத்தில் வாழ்ந்த சைவாபிமானியாகிய தம்பிரான் அப்பர் என்பவரின் முன்முயற்சியாலும் உபாத்தி

பொறிக்கப்படக் காரணராயிருந்தவரும் உபாத்தியாயர் அவர்களே. அன்னார் கோயில் உள்ளளவும் நினைவு கூரப்படத்தக்கவர்.

அம்மனின் ஆலயபரிபாலனம் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களுக்கு ஒருமுறை புதியவர்கள் கைக்கு மாறிவந்திருப்பதை நாம் அவதானிக்க முடிகிறது. 1928 இல், 1948 இல், 1972 இல், 1994 இல் இப்படி அம்பிகை காலத்துக்குக் காலம் தமக்குப் பணி செய்யும் கூட்டத்தாரைச் சேர்த்து தன்பணி சிறப்பிக்க வைப்பதும் தெய்வீகமே

பரிவாரமூர்த்திகள் காலம்

அடுத்து மணியகாரனாக இருந்த திரு. கோ. கதிரேசு அவர்கள் தமது தள்ளாவயதிலும் திருவிளக்கேற்றித் தொண்டாற்றியதும், பரிவார மூர்த்திகளான விநாயகர், முருகன், வைரவர் ஆகியவர்க்கு கோயில் கட்டியதும் மணிக்கோபுரம் அமைப்பித்ததும் பெரியார் கோ. கதிரேசுவை நினைவு கூருவதற்கு போதுமானவை. அன்னார் ஆலய அமைதிபேணி அறவழி சார்ந்து பரிபாலனம் செய்ததும், வழக்குரைத்து கோயிலின் பொதுமையை நிலைநாட்டியதும் யாவரும் அறிந்ததே.

கொடித்தம்ப காலம்

தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர்களாக வந்த திரு. சி. பாலசிங்கம், திரு. த. தங்கராசா ஆகியோரின் காலத்திலேதான் கொடித்தம்பம் தாபிக்கப்பட்டது. வசந்தமண்டபம் உள்வீதியின் ஓர்பாகம் முற்றுவிக்கப்படவும், ஒளி வசதி மற்றும் காலந்தவறாத பூசை முறைகள் ஏற்படவும் அவர்களே காரணராய் இருந்தனர். திரு.சி. பாலசிங்கம் அவர்களின் மறைவையொட்டி வந்த சபையினர் காலத்தினை ஆலய அலங்கார காலம் என்று கூறலாம்.

அலங்கார காலம்

இக்காலத்து ஆலயம் வண்ணப்பூச்சுக்களால் அலங்கரிக்கப்பட்டது. அம்பிகையின் பல்வேறு மூர்த்தங்கள் சுவர்

## பக்தர் துயர் தீர்க்கும் அன்னை முத்துமாரி

துயர் தீர்க்கும் அன்னை முத்துமாரி ஓர் ஆலயத்திற்கு சிறப்பும் பெருமையும் தருபவை அங்கு நடைபெறும் விழாக்களே: நித்திய, நைமித்திய, காமிய விழாக்கள் உரிய விதிப்படி கோயிலில் நடைபெற வேண்டியதன் அவசியம் பற்றி சிவாகமங்கள் கூறுகின்றன.

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு விழாக்கள் மலிந்த திருக்கோயிலாக இன்று திகழ்கின்றது.

துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் மத்தியில் வாழும் அடியார்கள் அம்பாளின் சந்நிதானத்திலே மன அமைதியையும், நம்பிக்கையையும், பெறுகிறார்கள், அம்பிகையின் பணியில் இன்பம் காண்கிறார்கள்; அம்பிகைக்கு விழாக்கள் நடத்தி விமோசனங்கள் தேடுகிறார்கள்.

அடியார்கள் துன்பம் நீங்கி இன்பம் பெற எல்லாம் வல்ல முத்துமாரி அம்பாளின் பாதக்கமலங்களை வேண்டி அடியார்கள் சகல சௌபாக்கியங்களோடும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்;

கிரியா பக்திமணி பிரம்மஸ்ரீ
தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்
(தேவஸ்தான குரு, அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்)


வேவிலந்தை அன்னையின் தாள் பணிவோம்!

ஸ்ரீ முருகன் மருந்துச்சாலை
பருத்தித்துறை

செல்லமுத்தூஸ் புடைவை அகம்
பிரதான வீதி, நெல்லியடி.

ஸ்ரீ முருகன் பலசரக்கு மாளிகை
கண்டி வீதி, கொடிகாமம்.

ராணி மில்
பிரதான வீதி, நெல்லியடி.

ஹப்பி ரெக்ஸ்ரைல்
பிரதான வீதி, நெல்லியடி.

கிருஷாந்தி படப்பிடிப்பாளர்
மாலு சந்தை, அல்வாய்.

சிவ படப்பிடிப்பாளர்
வியாபாரி மூலை.

கணேஷா வர்த்தக நிலையம்
65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே!

விழாக்களில் முதலிடம் பெறுவது தேர்த்திருவிழா. அல்வாய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய உற்சவங்கள் மிகச் சிறப்பாக நடைபெறுவதை அறிந்தோம். மிக மகிழ்ச்சி.

அவைகளில் தேர்த்திருவிழா அன்று அடியார்கள் ஒருமையுடனும் உறுதியான பக்தியோடும் உயர் [illegible] வடம் பிடிப்பர் [illegible] உள ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டு. அன்று எழுந்தருளும் விக்கிரகத்தின் மூலப் பொலிவை உள்ளுணர்வோடு உற்றுநோக்கின் உணரலாம்.

நிலையிலா மானுட வாழ்க்கையைத் தேர்ந்து கொள் என்பது தேர். இதனைத் தேர்ச் சிற்பங்களில் காட்டியிருப்பார்கள். பல தத்துவார்த்தங்களை உள்ளடக்கி விளக்குவது தேரின் அமைப்பு. அவற்றைத் தெளிவாக எழுதப்புகின் விரியும்.

[illegible] எல்லாம் [illegible] அசைக்க முடியாத பக்தியுடனும் அம்பாளின் திருவடிகளை இறுகப்பற்றிக் கொண்டால் வேண்டுவனவெல்லாம் ஈய்ந்தருளுவாள். அன்னையை நம்புங்கள்.

இவ்விழாக்கள் சிறப்புற நிறைவுற எல்லாவகையிலும் தொண்டுகள் புரியும் அன்பர்களைப் பாராட்டி எல்லோருக்கும் எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ குருமஹா
சந்நிதானம்


அன்னை ஸ்ரீ முத்துமாரி அருள் வேண்டுகிறோம்!

நாதன் பலசரக்குக் கடை
A 8, நவீன சந்தை, நெல்லியடி.

ஆவனமுகன் புடைவை மாளிகை
நெல்லியடி.

செல்வராசா பல்பொருள் மாடம்
(பலசரக்கு வியாபாரம்)
முதலாம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

புதிய இதயன்ஸ்
நெல்லியடி.

ரட்ணம் புடைவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி.

சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
நெல்லியடி.

சுபாஸ் பேக்கரி
(வெதுப்பகம்)
நெல்லியடி.

ஆனந்தா பலசரக்கு மாளிகை
(மாணிக்கம் & சன்ஸ்)
நெல்லியடி.

சிவலிங்கம் வெற்றிலைக் கடை
நவீன சந்தை, நெல்லியடி.

கிருஷ்ணானந்தம் பலசரக்குக் கடை
A 1, நவீன சந்தை, நெல்லியடி.

சி. அருளானந்தம்
பல்பொருள் வர்த்தக நிலையம்
வத்தனை, அல்வாய்.

ராணி லயிற்
அல்வாய்.

வீடியோ என்ஜினியேர்ஸ்
நெல்லியடி.

நெல்லியடி விற்பனைக் கூடம்
பிரதான வீதி, நெல்லியடி.

செந்தி மிதிவண்டி திருத்துமிடம்
மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி.

[விளம்பர இல. 8-8722]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயில்
# தேர்த்திருவிழா சிறப்பு மலர்

21 - 07 - 1994

## தாமே தமக்கு இருப்பிடம் தேர்ந்த வாய்க்கால் தரவை விநாயக வள்ளல்

"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

நீர்வளம், நிலவளம் மிக்க நீர்வேலிப் பதியில் கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களின் வினைகளைத் தீர்த்து அருள்பாலித்துக்கொண்டிருக்கும் நீர்வேலி வாய்க்கால் தரவை மூத்தநயினார் கோயில் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகின்றது.

இத்தினத்தில் இவ்வாலய சரித்திரத்தைப் பற்றிச் சிந்திப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

ஒரு கிராமத்தின் ஈசான திசையில் ஆலயம் ஒன்று அமையுமேயாகில் அவ்வாலயத்தின் சிறப்பினாலே அக்கிராமமே வளர்ச்சியடைந்து சிறப்படையும் என சைவாகமம் கூறுகின்றது.

இத்தகைய நீர்வேலிக் கிராமத்தின் ஈசான திசையிலே இவ்வாலயம் அமைந்தினதால் இவ்வாலயத்தின் சிறப்பால் இக்கிராமம் பலவகையிலும் சிறப்புப்பெற்று விளங்குகின்றது.

இவ்வாலயம் அமைந்துள்ள இடம் இற்றைக்கு ஐந்நூறு வருடங்களுக்கு முன்னரே மூத்தநயினார் கோயிலடைவு என்று அழைக்கப்பட்டு வந்தது. இவ்வளவினுள் ஒரு கேணியும் அமைந்திருந்தது. அக்காலத்தில் இக்கிராமத்தினூடாக கால்நடையாகச் செல்லும் பிரயாணிகள் இக்கேணியில் தாகம் நீக்கி, இங்கிருந்த அடர்ந்த சோலையில் இளைப்பாறிச் செல்வதும் வழக்கம்.

ஒருநாள் குரும்பசிட்டி, கட்டுவன் பகுதி மக்கள் வன்னி நாட்டில் கமம் செய்துவிட்டு வன்னியிலுள்ள தமது கமத்தில் கண்டெடுத்த பிள்ளையார் விக்கிரகத்தைத் தமது ஊரில் பிரதிஷ்டை செய்ய எண்ணி தாம் கொண்டுவந்த நெல்லுச் சாக்கினுள் வைத்துக் கொண்டுவந்தார்கள்.



அப்படிவந்தவர்கள் தாகமிகுதியால் தமது தாகத்தைத் தீர்ப்பதற்காக குறித்த இக்கேணிக்குள் நெல்லுச்சாக்கை இறக்கிவைத்து விட்டு, அக்கேணியிலேயே தண்ணீர் குடித்து தாகத்தைத் தீர்த்த பின்னர் குறிப்பிட்ட நெல்லுச் சாக்கைத் தூக்க முயற்சித்தனர். அச்சாக்கு அசையவே இல்லை. தம்மாலான சகல முயற்சிகளையும் செய்தும் சாக்கு அசையாமை கண்டு பெரிதும் ஆச்சரியப்பட்டனர்.

தெய்வசக்தியை மனிதசக்தி வெல்லுமா? விக்கிரகத்தோடு கூடிய அந்த நெல்லுச்சாக்கை அந்த இடத்திலேயே வைத்து விட்டு போய் விட்டார்கள். பார்த்தீர்களா, மூத்தநயினார் தன் சக்தியை தாமாகவே தமக்கு இடம்எடுத்துக்கொண்டார். இச்செய்தியைக்கேள்வியுற்ற அக்காணிச் சொந்தக்காரரான சிறுப்பிட்டி வாசியானவர் அக்காலத்திலிருந்த சிவப்பிராமணரான பிரம்மஸ்ரீ சிவசாமிக் குருக்களோடு ஆலோசித்து அக்காணிக்குள்ளேயே கோயில் அமைத்து, இவ்விக்கிரகத்தைப் பிரதிஷ்டைசெய்து கும்பாபிஷேகம் செய்வித்தார்.

இவ்விநாயகரின் அருளால் ஆலயம் படிப்படியாகவளர்ந்து இக்கிராமத்தைச் சிறப்படையச்செய்துள்ளது.

தாமாகவே இடம் எடுத்துக் கொண்ட விநாயகர் தம்மை வழிபட்டுவரும் அடியார்களின் அல்லல் அகற்றி அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

நாமும் அந்த விநாயகரின் அருளை வேண்டிநிற்போமாக ★

— த. பாராஜசிங்கம் —

## சமூக வளர்ச்சிக் கோட்பாடும் தேர்த் திருவிழாவின் சிறப்பம்சமும்

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
ஆனை முகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

செந்தமிழும், சிவநெறியும் செழித்துவளரும் நீர்வேலியில், சந்திக்குப் பக்கத்தில், வாய்க்கால் தரவைப் பதியில் எழுந்தருளி அடியார்களின் அல்லல் அகற்றிக் கொண்டிருக்கும் வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயில்



தேர்த்திருவிழா இன்று (21-07-94) வியாழக்கிழமை பூர்வபக்க சதுர்த்தசி நாளில் நடைபெறுகின்றது.

நாளை பூரணை தினத்தில் தீர்த்தஉற்சவம் நடைபெறும்.

ஆலயங்களிலே தேர்த்திருவிழா ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற பெருவிழாவாகும். அடியார்கள் ஆண்டுக்கு ஒருமுறை உவகையுறவும், ஒருங்கிணைந்து அரோகரா சொல்லவும், ஆனந்தமாய் ஆடவும், பாடவும், மங்களம் பொலியவும் சிறப்பு மிகு நன்னாளாக விளங்குகின்றது. தேர்த் திருவிழா என்பது ஒரு பொதுவிழா. ஏற்றமுறும் தமிழர் வாழ்வின் இது ஒரு எழுச்சிவிழா, வரலாறு போற்றும் சைவப் பெருவிழா.

இப்படியான இந்த சிறப்பு விழாவைப் பற்றி இன்றைய தினத்தில் சிந்திப்பது மிகவும் பொருத்தமானதே. அதைப் பற்றி சிந்திக்கும் போது நாம் முக்கியமான மூன்றைக் கருத்திற் கொள்வோம்.

ஒன்று அழகு ஆலயமே அழகான அமைப்புள்ளது அதன்முன்னோடியாக அமைந்தது தேர் இந்த அழகிய தேரில் விநாயகப் பெருமான் அலங்காரபூஜிதராக உலா வந்தருளும் அலங்காரக் காட்சி அடியார்களை மெய்சிலிர்க்க வைக்கும் தன்மையது. அடியார்களைத் தன்பால் இழுக்கின்ற அந்த விநாயகரின் அருளொளி அளப்பரியது.

தேர்த் திருவிழாவின் தத்துவத்தைப் பற்றியும் நாம் இன்றைய தினம் சிந்திப்பது சாலப் பொருத்தமாகும்.

ஆண்டவன் பூமியைத் தேராகக் கொண்டிருக்கிறான் நான்கு வேதங்களும் தேரில் கட்டப்பட்ட நான்கு குதிரைகள் ஆகும். பிரம்மனே இந்த தேரின் சாரதியாக சூரிய சந்திரர்களே தேரின் சில்லுகளாக உள்ளனர். மேருவை வில்லாகவும், வாசுகி நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்னி தேவனை அம்பின் கூராகவும், கொண்டு எழுந்தருளி பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழிப்பதற்காகவே தேர் ஊர்ந்து செல்கின்றது

(5 ஆம் பக்கம் பார்க்க)

டாக்டர்
க. தருமலிங்கம்

### தேர்த்திருவிழா நிகழ்ச்சிகள்

★ காலை 8 மணி — வசந்த மண்டப பூசை
★ காலை 9 மணி — விநாயகப் பெருமான் தேரில் எழுந்தருளல்.
★ பிற்பகல் 3 மணி — விநாயகப் பெருமான் தேரில் இருந்து இறக்கப்படுதல்.
★ இரவு 6-45 மணி — சமயச் சொற்பொழிவு. நிகழ்த்துபவர்: பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மா.


தேரினிலே வந்தெம்மை நேரினிலே காத்திடையா!

**பிள்ளையார் விலாஸ்**
சிற்றுண்டியகம்
நீர்வேலிச் சந்தி.

**பவானி களஞ்சியம்**
இராச வீதி, நீர்வேலி

**விநாயகர் களஞ்சியம்**
பத்திரிகை விற்பனையும்
பலசரக்கு வியாபாரமும்
நீர்வேலி வீதி, அச்செழு.

**சி. நித்தியானந்தன்**
(ஆனந்தன்)
நீர்வேலி.
(சி/8767)



தேரேறும் விநாயகரே! பாராரைக் காருமையா

**S. K. வைத்தியசாலை**
நீர்வேலி சந்தி.

பத்திரிகை விற்பனையாளரும
பலசரக்கு வர்த்தகமும்
**லிங்கம் ஸ்டோர்ஸ்**
நீர்வேலிச் சந்தி.

**அபிராமி மருந்தகம்**
நீர்வேலிச் சந்தி.

**அம்பாள் இரூபகம்**
நீர்வேலிச் சந்தி.


## சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

மேசை, கதிரை செற்றி, அலுமாரிகள், அழகு சாதன கண்ணாடி மேசை, தையல் மெஷின், சோக்கேஸ், கடைக்குரிய கவுண்டர் மேசை, சாப்பாட்டு மேசை, சொப்பர் சைக்கிள் ½ சைக்கிள் வாங்குங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாச பிள்ளையார் கோயில் பின் வீதி, நல்லூர். [32006]

### புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப்பரிசில் தரித மீட்டற் பயிற்சியைப் பெறாத மாணவர்கள் வாங்கிப் படித்து பயனடையுங்கள் ஞாயிறு தோறும் வெளிவிடப்படும் வினாத்தாள்கள் எடுத்துச் செய்யாதவர்கள் உடன் எடுத்துச் செய்யுங்கள். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி நிச்சயம். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32019)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப் பாருங்கள். த. சிவானந்தன் பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 884, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (31992)

### காணவில்லை

பொமனேரியன் 3 வயது பிறவுன் பெண்நாயும் 2வயது வெள்ளை ஆண் நாயும் 16-07-94 இல் காணவில்லை விபரம் சொல்பவருக்கு சன்மானம் வழங்கப்படும். பழைய இல. 148, கோயில் வீதி, நல்லூர். (7540)

### பொருளியல்

"பணம் வங்கி விலைச்சுப்டெண்" ஆண்மைக்கால விடயங்களை (நாணயத்தனம், பணப்பெருக்கி) அடக்கியநூல் இன்றுமுதல் பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும் ஆக்கம்; வே. கருணாகரன் விலை; 15 ரூ ா. (31973)

### லிகிதர் தேவை

வியாபார வர்த்தக நிலையம் ஒன்றுக்கு பெண் லிகிதர் தேவை (யாழ். மாநகர சபைக்குள் இருப்பவர்) நேரில் வரவும். சிவா களஞ்சியம்) இல; 425. K. K. S. வீதி, (யாழ் இந்துக்கல்லூரி சந்தி, யாழ்ப்பாணம். (32013)


### தபால்களை சேர்க்க கோரிக்கை

வெளியூருக்கான தபால்களை இன்று வியாழக்கிழமை காலை 9-00மணிக்கு முன்பாக யாழ். பிரதம தபாலகத்தில் உள்ள பெட்டியில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

சேர்க்கப்பட்ட தபால்கள் 'பிளாம்பலாக்' கப்பலில் இன்றே திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஹேமா விடயத்தில் டி.பி விட்டுக் கொடார்

கொழும்பு, ஜூலை 21

"ஹேமா விவகாரத்தில் இன்னும் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது"

ஜனாதிபதி விஜேதுங்கா தனது நெருங்கிய நம்பிக்கையானவர்களிடம் முன்கண்டவாறு கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரத்தில் ஹேமாவையும் சஜித் பிரேமதாஸாவையும் ஈடுபடுத்துவதற்காக கட்சியின் முக்கியஸ்தர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பதாக கூறப்படும் சமயத்தில் —

ஜனாதிபதி விஜேதுங்க முன்கண்ட இறுக்கமான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)


இன்று (21 - 07 - 1994)
அராலி கரைப்பிட்டி விநாயகர்
**தேர்த் திருவிழா**
காலை 9 மணிக்கு

தேரேறி வருகின்ற கரைப்பிட்டி விநாயகனின் திருத்தாள் பணிவோர்க்கு உரைக்கின்ற விக்கினங்கள் என்றும் உண்டாகாதே!

**ஸ்ருடியோ நித்ய சித்ரா**
சங்கானை.
[32028]


### நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 11 — 08 — 1949 | 21 — 06 — 1994 |

அமரர்
**இரத்தினசிங்கம் மணிவண்ணன்**
(ஆசிரியர், கொழும்பு இந்துக் கல்லூரி, முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி.)

எங்கள் அன்புத் தெய்வம் எமைப் பிரிந்து இன்றோடு மாதம் ஒன்று ஆகிறது.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றி, எமது தாங்கொணாத் துயரைப் பகிர்ந்து கொண்ட எல்லோருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (21-07-94) வியாழன், பகல், எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரின் நினைவஞ்சலி, வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

— குடும்பத்தினர்.

அண்ணாமலை வீதி,
கதுமலை,
மானிப்பாய்.
(31941)

### 3ஆம் வருட நினைவஞ்சலி



**அப்பாக்குட்டி பொன்னுத்துரை**
(சொக்சர்)

மண்ணில்: 11 — 02 — 1910
விண்ணில்: 25 — 07 — 1991
திதி: 21 — 07 — 1994

குடும்பத்தின் ஒளிவிளக்காய் நின்று
எம்மையெல்லாம் பேணிக் காத்திர
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
ஐயா நீங்கள் மறைந்தது ஏனோ?
உங்களது அன்பையும் அரவணைப்பையும்
நினைத்து என்றும் ஏங்குகிறோம்
உங்களை நினையாத நாளில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[illegible] வீதி,
[illegible]
யாழ்ப்பாணம்.
[32027]

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 14 — 06 — 1929 | 21 — 07 — 1992 |

திருமதி
**தங்கரத்தினம் துரைராஜசிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியை)

என்றும் உள்ளத்தில் குடியிருக்கும் ஆருயிர் அம்மாவே!
ஈராண்டு சென்றதுவே இன் முகத்தைக் கண்டு!
பல்லாண்டு சென்றாலும் ஆறாது எம் உள்ளம்,
துணைவியாக, தாயாக, சோதரியாக, வழிகாட்டியாக
வாழ வைத்த தெய்வம் என்றும் காட்டிய வழி நடந்து
ஆண்டவர் சந்நிதியில் சந்திப்போம் ஆருயிர் அம்மாவே!

பிரிவால் துயருறும்,
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

சேர்ச்சடி,
கே. கே. எஸ். றோட்
கொக்குவில்.
(32011)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## மேலும் ஒரு படியில் ...

தமிழீழ நிர்வாக சேவை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

தமிழ் மக்கள் தமக்கெனத் தன்னாட்சி நிறுவுவதற்காக உருவாக்கி வரும் கட்டமைப்புகளில் இதுவும் ஒன்றாகும். தன்னாட்சிக் கட்டமைப்பு அலகுகளில் நிர்வாகத்துறை முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும்.

கடந்த சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக, மீட்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள அரசின் நிர்வாகத் துறைக்குச் சமாந்தரமாக விடுதலைப் புலிகள் நிழல் நிர்வாகம் ஒன்று இயங்கி வந்தது. இப்போது அது உத்தியோகபூர்வமான, நிசமான நிர்வாக அமைப்பாக உருவாக்கப்பட்டுவிட்டது.

ஈழத் தமிழ் மக்களின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமை, தங்களைத் தாங்களே ஆளும் தன்னாட்சி உரிமை என்பனவற்றை நியாய சிந்தையுடன் வழங்கும் நல்லெண்ணம் சிங்கள அரசுக்கு உதிப்பதாக இல்லை.

தமிழர்களின் மேற்சொன்ன பிறப்புரிமைகளை வழங்குமாறு, தமது அரசியல் தலைவர்களைத் தூண்டும் அளவுக்கு சிங்கள மக்களில் பெரும்பாலானோர் இன்னும் அரசியல் பக்குவமடையவில்லை. தமிழர்கள் கேட்பவற்றைக் கொடுக்கக்கூடாது என்ற கருத்தையே சிங்கள அரசியல்வாதிகளும், பௌத்த பிக்குகளும் தென்னிலங்கை மக்களிடையே தொடர்ந்தும் பரப்பி வருகின்றனர்.

ஆகையால் இப்பத்தியில் நாம் அடிக்கடி எடுத்துரைப்பது போல, தமிழர்கள் தங்கள் உரிமைகளை தாமே உருவாக்கிக் கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலை தோன்றியுள்ளது; சிங்களவர்கள் தந்தால் தான் நாம் எமது உரிமைகளை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது என்ன நியதி? எமது உரிமைகளை நாமே உண்டாக்கிக் கொண்டு அவற்றைப் பாதுகாக்க வேண்டும். அவற்றைப் பறிக்க வரும்போது அதனைத் தடுக்க வல்ல பலத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் தன்னாட்சிக்கு அடித்தளம் அமைக்கப்படுவது மிக அவசியமாகும். அந்த அவசிய தேவை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருவது வரவேற்கத் தக்கதாகும்;

தமிழீழத்துக்கென காவல்துறை, நீதித்துறை, வங்கித்துறை ஆகியன உத்தியோகபூர்வமாக முழுஅளவில் இயங்கி வருகின்றன. அதனோடு சிவில் நிர்வாகத்துறை இப்போது சேர்க்கப்பட்டு விட்டது. இவற்றைப் போல் வைத்தியத்துறை, போக்குவரத்து, வர்த்தகம் போன்ற உள்ளகக் கட்டுமானங்களும் (Infrastructures) முழு அளவில் இயங்கத் தொடங்க வேண்டும்.

மக்களுக்குரிய இந்த ஆட்சி அலகுகளை உருவாக்கி விடுவதால் மட்டும் நாம் தன்னாட்சியை நிறைவாக்கி, அதனைப் பிரகடனம் செய்துவிட முடியாது.

தன்னாட்சி அரசுக்குரிய அலகுகள் மக்களின் தேவைகளை நிறைவேற்றவல்ல பலத்தைப் பெறவேண்டும். அதற்கான வளங்கள் திரட்டப்பட வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக லஞ்சம், ஊழல், குடும்ப ஆதிக்கம், வேண்டாத செல்வாக்கு என்பன தன்னாட்சி அலகுகளை வந்து தாக்காமல் பாதுகாத்துக் கொள்வது மிகப் பிரதானமாகும்.

சிங்கள அரசின் சிவில் நிர்வாக அமைப்பைக் குழப்பாமலே தமிழீழ நிர்வாக சேவை இயங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனோடு இணைந்து செயற்பட்டு, பொது மக்களுக்குரிய சேவைகள் சரியான முறையில் நடக்கின்றனவா என்று கண்காணிப்பதே தமிழீழ நிர்வாக சேவையின் இப்போதைய பணியாக இருக்குமாம்.

அந்த நிலை வளர்ந்து, தமிழீழ நிர்வாக சேவை தனித்தும், தனித்துவமாகவும் இயங்க வழி உண்டாக வேண்டும் என்று விழைவோமாக. அப்போது தமிழர் தன்னாட்சி மலரும் என்று நம்பலாம்.

# லிபரல்- முஸ்லிம் காங்கிரஸ் கூட்டு
# எதிரணியினர் மத்தியில் அதிருப்தி

கொழும்பு, ஜூலை 21
முஸ்லிம்காங்கிரஸ் லிபரல் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொண்டது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலும் முஸ்லிம் காங்கிரஸிலும் அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸா காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோர்த்துச் செயல்பட்ட லிபரல் கட்சி தற்போது முஸ்லிம் காங்கிரஸுடன் சேர்ந்து கொண்டிருப்பது, முஸ்லிம் காங்கிரஸுடன் தேர்தல் உடன்பாடு செய்துள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமைப்பீடத்துக்கு அவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் பட்டியலின் கீழ் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் போட்டியிடும் போது, முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களும் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பது முன்னணித் தலைவர்களின் கருத்தாக உள்ளது.

இதன்படி முன்னணியின் தலைமையுடன் கலந்தாலோசிக்காது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் காங்கிரஸின் தேசியப்பட்டியலில் லிபரல் கட்சித் தலைவர் சண அமரதுங்காவுக்கும் உப தலைவர் அஜித பெரேராவுக்கும் எப்படி இடமளித்தார் என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. (இ-எ)

## பிரசாரக் கூட்டங்களில் சந்திரிகா — ஸ்ரீமணி

கொழும்பு, ஜூலை 21
சந்திரிகாவும் ஸ்ரீமணியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஒன்றாகவே சென்று கலந்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை சந்திரிகா, ஸ்ரீமணியை சந்தித்துப் பேசியபோது இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரங்களின்போது கடைப்பிடிக்க வேண்டிய உத்திகளை அச்சந்திப்பின்போது இரு தலைவர்களும் தயாரித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஏனைய தலைவர்கள் தனித்தனியாக பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## தொண்டாவின் ஏகபோகம் விரைவில் முடிவுக்கு வரும்

### நடேசன் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 21
மலைநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடந்த 50 ஆண்டுகளாக கொண்டிருந்த ஏகபோக உரிமை விரைவில் முடிவுக்கு வந்து விடும்.

கூட்டுத் தோட்ட தொழிற்சங்கக் கமிட்டி அமைப்பாளர் எஸ். நடேசன் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இனியும் பலம் பொருந்தியது அல்ல என்பதை எதிர்வரும் பொதுத் தேர்தல் நிரூபிக்கப் போகிறது என்றும் அவர் கூறினர்.

எதிர்வரும் தேர்தலில் தொண்டமான் இ.தொ.கா வின் தேர்தல் சின்னத்தில் போட்டியிட்டால் நிச்சயம் படுதோல்வி அடைவார் என்றும் தெரிவித்தார். (இ-ந)

## ஜே. வி. பி. வேட்பாளர்கள் கையெழுத்திட்டது எப்படி?

### 'சண்டே ஐலண்ட்' தகவல்

கொழும்பு, ஜூலை 21
எதிர்வரும் தேர்தலில் இலங்கை முற்போக்கு முன்னணி என்ற அமைப்பின் கீழ் போட்டியிடும் ஜே. வி. பி. வேட்பாளர்கள் ஜே. வி. பி. பாணியிலேயே வேட்பு மனுக்களில் கையெழுத்திட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜே. வி. பி. வேட்பாளர்களில் பலர் தலைமறைவாகவே இன்னும் இருந்து வருகின்றனர்.

வேட்பு மனுக்களில் கையெழுத்திடுவதற்காக பகிரங்கமாக வெளிப்பட்டு வந்தால் தாம் கைது செய்யப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் காரணமாக அவர்களின் கையொப்பங்களை பெறுவதற்கு ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் பிரமுகர்கள் இரகசியப்பாணியைக் கையாண்டனர்.

போட்டியிட விருப்பம் தெரிவித்த ஜே. வி. பியினருக்கு முதலில் தகவல்கள் அனுப்பப்பட்டன.

அவர்கள் தங்களின் கையொப்பங்களை பெறுவதற்கு உரிய நேரம் இடங்களை பதில் தகவலில் தெரிவித்திருந்தனர்.

அதற்கிணங்க முற்போக்கு முன்னணியின் மாவட்ட அமைப்பாளர்கள் வேட்பாளர்களின் பட்டியல்களை எடுத்துக் கொண்டு குறிக்கப்பட்ட நேரத்தில் பஸ் நிலையக் கியூ வரிசையிலும், ஹோட்டல்களிலும் கடைகளிலும் சனங்களோடு சனங்களாக நின்றனர்.

தலைமறைவாக வாழும் ஜே. வி. பி. வேட்பாளர்கள் அங்குமிங்கும் பார்த்தனர். தங்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி சைகைகளைக் காட்டிய அமைப்பாளர்களை அவர்கள் அணுகி வேட்பு மனுக்களில் கையெழுத்திட்டு விட்டு மீண்டும் தலைமறைவாகி விட்டனர்.

இப்படித்தான் ஜே.வி.பி. வேட்பாளர்களின் கையொப்பங்கள் பெறப்பட்டதாக சண்டே ஐலண்ட் தகவல் வெளியிட்டுள்ளது.

வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டபின்னர் ஜே.வி.பி. வேட்பாளர்கள் ஏனைய கட்சி வேட்பாளர்கள் போன்று பகிரங்கமாக வெளிப்படும் உரிமையைப் பெற்றுள்ளனர் என்றும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## பிரதிப் பொலீஸ்மா அதிபர் கார் வாங்கியதில் தில்லுமுல்லு

கொழும்பு, ஜூலை 21
பிரதிப் பொலீஸ்மா அதிபர் (டி. ஐ. ஜி) ஒருவர் சந்தைப் பெறுமதியிலும் பார்க்க மிகக் குறைந்த விலைக்குக் கார் ஒன்றைக் கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பாக, இரகசியப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட காரின் சந்தைப் பெறுமதி மூன்றரை லட்சம் ரூபா என்றும் —

பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஒன்றரை லட்சம் ரூபாவுக்கே அக்காரை வாங்கினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கார்த் திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட பொலீஸ் சப்இன்ஸ்பெக்டர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே முன்கண்ட மோசடி அம்பலமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட சப்இன்ஸ்பெக்டர் கார் ஒன்றை களனிக்கு எடுத்துச் சென்று அதனை விற்பதற்காக அங்குள்ள கார் விற்பனை நிலையம் ஒன்றிடம் ஒப்படைத்தாராம். இது தொடர்பான தஸ்தாவேஜுகளை இரகசியப் பொலீஸார் சோதனை செய்தபோது, அக்கார் திருட்டுப்போன ஒன்று என்பது தெரிய வந்தது.

அதனைத் தொடர்ந்து சப் இன்ஸ்பெக்டர் கைது செய்யப்பட்டார். பின்னர் நடத்தப்பட்ட விசாரணையின்போது அக்காரை விற்பதற்காக சம்பந்தப்பட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் தம்மிடம் தந்ததாக அந்த சப்இன்ஸ்பெக்டர் தெரிவித்தார். (ஒ-எ)

## குரு பூர்ணிமா புனிதத் திருநாள்

குரு பூர்ணிமா ஒவ்வொரு சாதகனும் தன் குருநாதனோடுள்ள ஆன்மீகத் தொடர்பை புதுமையுறச் செய்யும் புனிதத் திருநாளாகத் திகழ்கிறது. அவன் மீண்டும் ஒரு முறை தன் உடல், உள்ளம், உயிர் அனைத்தையும் தன் பேரருளாளனுக்கு அர்ப்பணிப்பவன் ஆகின்றான். குருவே பிரமன், குருவே விஷ்ணு, குருவே மகேஸ்வரன், குருவே சாட்சாத் பரப்பிரமம் என்ற திடநம்பிக்கையில் வளர்ச்சியுறுகிறான்.

இந்தப் புனிதத் திருநாளிலே, உலகெங்கணுமுள்ள ஆன்மீக அன்பர்கள் பிரம வித்தை நல்கும் குருநாதனைப் பெரிதும் போற்றுகின்றனர். ஆன்மீகப் பாதையில் அயராது செல்லவும் அரும்பெரும் இலக்கினை அடையவும் மேன் மேலும் மன உறுதி பூணுகின்றனர்.

''எவனொருவன், ஆண்டவனிலும் ஆண்டவனிடம் போலவே தன் திவ்விய குருநாதனிலும் எல்லையிலா அன்பு செலுத்துகின்றானோ, அவனொருவனுக்கே ஆன்மீக உண்மைகள் வெளிப்பட்டு நிற்கின்றன'' என்றே உபநிடதம் கூறுகிறது. மனிதருக்கும், புலவர்களுக்கும் காரண ஞான விநோதங்களுக்கும் எட்டாத மெய்ப்பொருள் ஒன்றை அடைவுள், ஒரு நூறு பிறவிகளிற்றானும் பெறற்கரிய நூற்றினாலோ, புத்தி நுட்ப அனுபவங்களினாலோ இலகுவில் உணரத் தக்கதன்று: மாறாக குருநாதரின் உதடுகளிலிருந்து உதிரும் ஒருசொல், அவரின் தெய்வீகமான கரத்தின் ஒரு தொடுகை, அவர்தம் மேன்மை மிகு செம்மனத்தானான ஒரு சிந்தனை ஆகியவற்றுள் ஒன்றே, பக்தனின் அறிவுக்கு ஒளியூட்டி இறையுணர்வை அல்லது மெய்ப்பொருளறிவை வழங்கப்போதுமானது. இதுவும் தன்னலமற்ற சேவையினாலும் தூயபக்தியினாலும், ஓர் அன்பான அடியவன் தன் குருவுடன் ஆன்மீகத்தொடர்பு கொள்ளத் தகுதி பெற்றுவிட்டால் மாத்திரமே சாத்தியமாகும்.

குருபூர்ணிமா நாளையதினம் (22-7-1994இல்) பிரத்தியேக பூசை, பஜனை, சொற்பொழிவுகளுடன் நல்லூரிலுள்ள திவ்ய ஜீவன சங்கமண்டபத்தில் கொண்டாடப்படும்.

தெய்வீகமான குருநாதரின் 31 வது வருடாந்த புண்ணிய திதி ஆராதனை 31-7-1994இல் மேற்படி திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் கொண்டாடப்படும். 22-7-1994 தொடக்கம் 31-7-1994 வரையிலான 10 நாட்களும் பிற்பகல் 4 மணி முதல் 6 மணிவரை நடைபெறும் பிரத்தியேக பூசை, பஜனை, சொற்பொழிவுகளுடன் சாதனைக் காலமாக அனுஷ்டிக்கப்படும்.

சி. கனகரத்தினம்
தலைவர்
யாழ். திவ்விய ஜீவனசங்கம்

## குடிதண்ணீர் விநியோகம்; சீராக்க தண்ணீர் தாங்கி

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ் மாநகராட்சி மன்றம் சிறிய தண்ணீர் தாங்கி ஒன்றை அமைத்துள்ளது —

மாநகராட்சி மன்றத்தின் குடி தண்ணீர் சேவைக்கு இந்த தண்ணீர் தாங்கி பயன்படுத்தப்படும் என யாழ் மாநகர ஆணையாளர் கொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

பாஷையூர், குருநகர் நாவாந்துறை போன்ற கரையோரப் பகுதி மக்களுக்கு இந்த தண்ணீர் தாங்கி மூலம் குடி தண்ணீர் விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாநகராட்சி மன்றத்திடம் குடிதண்ணீர் நிரப்பக் கூடிய ஒரு பவுசர் மட்டுமே உள்ளது.

இதனால் மக்களுக்கு குடி தண்ணீர் விநியோகத்தை சீராக நடத்த முடியாது எனவும் —

குடிதண்ணீர் விநியோகத்தை சீராக நடத்துவதற்காகவே மேலும் ஒரு சிறிய தண்ணீர் தாங்கியை தாம் அமைத்திருப்பதாக ஆணையாளர் தெரிவித்தார். (இ-17)

## புலிகளின் குரல் வானொலியில்

21 — 07 — 1994
வியாழன் இரவு
★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — உரை — மொழித் தாய்மை காப்போம்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் ''மடியழற்சி கறவைகளைப் பாதிக்கும் நோய்'' — சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — ஏட்டிலிருந்து — நாடு அழைத்தது என்ற நூலிலிருந்து ''பங்களாதேஷ் தேசிய விடுதலைப் போர்'' என்ற கட்டுரையின் சில பகுதிகள்;
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்.

22 — 07 — 1994
வெள்ளி காலை
★ 7-02 — மாவீரர் வணக்கம்
★ 7-15 — விடுதலை கானங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## இனப்பிரச்சினையை பற்றிய உண்மையான தாற்பரியம்

### டி. பி. உணரவில்லை என்கிறார் தர்மசிறி சேனநாயக்கா

கொழும்பு, ஜூலை 21
இனப்பிரச்சினை பற்றிய உண்மையான தாற்பரியத்தை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உணராதிருப்பது தான் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது;

சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா சண்டே ஐலண்டுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு கூறியுள்ளார்.

வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினை வெறும் தீவிரவாதப் பிரச்சினை என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறிவருவதால் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி கணிசமான அளவு தமிழர்களின் வாக்குகளை இழக்கும் நிலையில் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்வீர்களா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

''அதனை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஜனாதிபதி இப்பிரச்சினையின் உண்மை நிலையை உணராது இருப்பது தான் என்னைக் குழப்பியுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி தமிழரின் வாக்குகளை இழக்கப்போகிறது எனக்கு கவலை தரவில்லை. ஜனாதிபதியின் விவேகமற்ற நிலைப்பாடு தான் எனக்குக் கவலை தருகிறது'' - என்றும் அவர் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் உடன்பாடு வைத்திருப்பது பற்றி கருத்து வெளியிடுகையில் —

சிறுபான்மையினர் தாங்கள் நம்பக்கூடிய அமைப்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைக் கருத ஆரம்பித்து விட்டனர் என்பது இதில் இருந்து தெரியவருகிறது என்று அவர் தெரிவித்தார். (இ-எ)

## ஆஸ்பத்திரி நிர்வாகக் குழு ராஜினாமா!

ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியின் நிர்வாகக் குழு நேற்று முன்தினம் ராஜினாமாச் செய்தது.

அங்கு நிலவும் ஊழல்கள் மற்றும் முறை கேடுகளுக்கு எதிராக அங்கு பணிபுரியும் டாக்டர்கள் நேற்று முன்தினம் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆஸ்பத்திரி நிர்வாகக் குழுவைப் பதவி விலகும்படி கேட்டுக்கொண்டது.

ஆஸ்பத்திரி நிர்வாகத்தைக் கவனிக்க இடைக்கால நிர்வாகக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. (இ-எ-6)

## அரச அதிபர் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் இன்று ''பிளாம்பஸால்'' கப்பலில் கொழும்பு செல்கிறார். (ஞ-3)

## கம்பன் விழாவில் இன்று ஆய்வரங்கு, பட்டிமண்டபம்

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவின் இரண்டாம் நளாகிய இன்று வியாழக்கிழமை நிகழ்ச்சிகள் காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராசா தலைமையுரை நிகழ்த்த மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா தொடக்கவுரையும், யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் வாழ்த்துரையும் நிகழ்த்துவார்கள்.

வித்துவான் க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும் ஆய்வரங்கில் பண்டிதர் க. சச்சிதானந்தன் ''கம்பனில் தொல்காப்பியரின் நோக்கு'' எனும் பொருளிலும், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி ''கம்பன் கருத்து நிலையும் இராமாயணக் கட்டமைப்பும்'' எனும் பொருளிலும் ஆய்வு நிகழ்த்துவார்கள்.

மாலை நிகழ்ச்சிகள் 4-30 மணிக்கு ஆரம்பமாகும். பளாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா தலைமையுரையும், திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் தொடக்கவுரையும், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கோ. பொ. பாலசிங்கம் வாழ்த்துரையும் நிகழ்த்துவார்கள்.

இறுதியாக திரு. இ. ஜெயராஜ் நடுவராகப் பணிபுரிய திரு. க. சிவராமலிங்கம், திரு. த. சிவகுமாரன், திரு. த. சிவசங்கர், பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு இரா. செல்வவடிவேல், திரு. ச. மணிமாறன், திரு. கே. கே. சோமசுந்தரம், திரு. இ. நந்தகுமார், திரு ஸ்ரீ பிரசாந்தன் ஆகியோர் பங்குபற்றும் பட்டிமண்டபம் நடைபெறும். (க-111)

### கற்கை நெறி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் பிரயோக எந்திரப் பொறியியல் பற்றிய ஓர் அடிப்படைக் கற்கை நெறி எதிர் வரும் சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வார இறுதி நாட்களில் இருமாத காலம் இடம் பெறவுள்ள இக்கற்கைநெறியில் பங்கு பற்ற ஆர்வம் உளளோர் நாளை வெள்ளிக்கிழமை [illegible] பதிவு செய்து கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழகத்தில் சமயப் பெருவிழா நிகழ்வுகள்

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் ஆதரவுடன் நாளை 22 ஆம் திகதியும் மறுதினம் 23 ஆம் திகதியும் சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நூற்றாண்டு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பிக்கும் நிகழ்ச்சி யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக் கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நா. செல்வநாயகம் ''விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்'' எனும் பொருளிலும், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் ''ஆன்மீகச் சிந்தனை மரபில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் சுவாமி விவேகானந்தரும்'' எனும் பொருளிலும் ஆய்வுரைகளை நிகழ்த்துவார்கள்.

மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிக்கு யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை தாங்குவார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி க. இராமநாதன் ''சுவாமி விவேகானந்தரின் மனித நேய விழுமியங்கள்'' எனும் பொருளில் ஆய்வுரை நிகழ்த்துவார். வேம்படி மகளிர் உயர்தர மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

சுவாமி சித்ரூபானந்தா பிரிவுபசாரப் பேருரையை நிகழ்த்துவார்.

இதேவேளை, ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்த புத்தகக் கண்காட்சி யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை மண்டபத்தில் காலை 8-30 மணிக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரால் திறந்து வைக்கப்படும். மாலை 4 மணி வரை பொதுமக்கள் கண்காட்சியைப் பார்வையிடலாம். (ம)

### சமூக...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவே தேர்த்திருவிழாவின் தத்துவமாகும்.

எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் இனம் என்று சொல்லி மகிழக்கூடியதாக 'அரோகரா'' சொல்லி வடம் பிடித்து இழுக்கும் போது தான் தேர் நகருகின்றது. இது எமது ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்துகின்றது. ஒற்றுமையின் தேவையை வலியுறுத்துகிறது. சமூகத்தில் ஒற்றுமை மிளிர்ந்தால் மட்டுமே அது வளர்ச்சி காண முடியும்.

தேர்த்திருவிழா வெறும்சமய தத்துவத்தை மட்டுமன்றி சமூக வளர்ச்சிக்கான கோட்பாட்டையும் எடுத்து உணர்த்தும் ஊர்ப்பெருவிழாவாகும். ★

**சீதனம் இன்றேல் திருமணம் இல்லை என்னும்**
**வேதனை வாழ்வை வேரோடு சாய்ப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ கந்தரோடை

# ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய 44 ஆவது ஆண்டு நிறைவுவிழா 1994

காலம்:- 22 – 07 – 94 நிலைய முன்றில் மாலை 6-30 மணி;

பிரதம விருந்தினர்: திரு. ஆ. மகாலிங்கம், பிரதேச செயலர், வலி தெற்கு:

சிறப்பு விருந்தினர்: திருமிகு. மு.வே.யோ.வாஞ்சிநாதன் த. ஈ. வி. பு. பிரமுகர்
திருமிகு. சி. இளம்பரிதி அரசியல்துறை யாழ். மாவட்டம்
செல்வி தமிழ்ச்செல்வி மகளிர் அமைப்பு, த. ஈ. வி. பு. யாழ். மாவட்டம்:

கௌரவ விருந்தினர் கவியுகன் அரசியல் துறை உடுவில் வட்டம்.

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(7277) நிர்வாகக் குழு

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆண்டு 13'B' (1995 வர்த்தகப் பிரிவு) வருப்புத் தலைவரான செல்வன் அம்பிகைபாகனின் தந்தையார்

### விஸ்வநாதன் இராமலிங்கம்

(யாழ். சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– 1995 வர்த்தகப் பிரிவு மாணவர்கள் –
யா / கனகரத்தினம் ம. ம. வி.

(32032)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் வி. இராமலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர் யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம், வேலணை)

19-7-94 இல் அமரத்துவம் அடைந்த எமது ஓய்வு பெற்ற அதிபர் வி. இராமலிங்கம் அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறோம்;

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் சங்கம்:
சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம். (32035)

## மரண அறிவித்தல்கள்

### வெங்கிட்ராமஐயர் வைத்தீஸ்வரஐயர்

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி இல 65ஐ சேர்ந்த வெங்கிட்ராமஐயர் வைத்தீஸ்வரஐயர் நேற்று (20 07-94) காலமானார். அன்னார் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், கேசவன் (நியூ ஹப்பிரெஸ்), வாசுதேவன், சுரேஸ் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், வசந்தி, சமந்தி ஆகியோரின் மாமனாரும், வத்ஷிகாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
வை. கேசவன்
(மகன்)

மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (32031)

### வைரமுத்து இராமலிங்கம்

(மலாயன் பென்சனர்)

பண்ணாகம் தெற்கு சுழிபுரத்தை வதிவிடமாகக் கொண்ட வை. இராமலிங்கம் காலமானார்.

இவர் திருமதி தங்கம்மாவின் அன்புக் கணவரும், யோகிந்திரன் (எணக்காளர், கோலாலம்பூர்- மலேசியா) பரமேஸ்வரி. மகேஸ்வரி நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி சிவனேஸ்வரி (ஆசிரியை- கோலாலம்பூர்), மா. பாக்கியநாதன் (பண்ணாகம்- உப- தபால் அதிபர்), துரைசிங்கம் (முன்னாள் யாழ் சபை முகாமையாளர்) விஜயகுமார் (செல்வராஜா ஸ்ரோஸ் டச்றோட் உடுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகுமார், பிரமிளா, சர்மிளா (மூவரும்மலேசியா) மயூரன், பிரசாத், பிரதீப், பிரநாத் ஆகியோரின் அன்புப் பேரனுமானார்;

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று (20-7 94) புதன்கிழமை நண்பகல் திருவடிநிலை மயானத்தில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மா, பாக்கியநாதன்
(32023) (உப- தபால் அதிபர் பண்ணாகம்)

### நாகமணி குமாரசாமி

மாதகலைப் பிறப்பிடமாகவும், தற்போது மாதகலில் வசித்து வந்தவருமாகிய நாகமணி குமாரசாமி 14. 7. 94 இல் காலமாகிவிட்டார்.

இவர் கந்தசாமி, பரமேஸ்வரியின் அன்பு தகப்பனாரும், பரமசாமி (இளைப்பாறிய ஆசிரியர் மாதகல் சென்யோசப் மகா வித்தியாலயம்), செல்லம்மா ஆகியோரின் அன்பு மாமனாரும், மணிவண்ணனின் அன்பு பேரனாரும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் 14. 7. 94 இல் மாதகலில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
குமாரசாமி கந்தசாமி
(மகன்)

செல்லத்துரை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (32034)

# ஹேமாவுக்கு போதியளவு பாதுகாப்பு இல்லையாம்!

கொழும்பு, ஜூலை 21

பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நாட்டின் முதலாவது பெண்ணாக விளங்கிய ஹேமா பிரேமதாஸாவுக்கு இன்று ஆயுதம் இல்லாத கான்ஸ்டபிள்கள் சிலரின் பாதுகாப்பே வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது:

போதுமான பாதுகாப்பு தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று அவர் திரும்பத் திரும்ப கோரியும் பலனளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# சஜித்துடன் விரைவில் நாடாளுமன்று செல்வேன்

## ஹேமா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 21

நானும் சஜித்தும் விரைவில் நாடாளுமன்றத்திற்குள் பிரவேசிப்போம்—

ஹேமா பிரேமதாஸா இப்படிக் கூறினார் என்று சண்டே ஐலண்ட் தகவல் வெளியிட்டிருக்கிறது.

கொழும்பு அரச செயலகத்துக்கு கடந்த 11 ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்வதற்காக போய் ஏமாற்றப்பட்ட நிலையில் வெளியேறுகையில் ஹேமா தம்மைச்சந்தித்த முன்னாள் சபாநாயகர் ஸ்ரான்லி திலகரத்னா, முன்னாள் எம்பி சிறிகுணரத்தினா ஆகியோரிடம் முன் கண்டவாறு தெரிவித்தார். என்று தெரிவிக்கப்படுகிறது.

# நாடாளுமன்றில் குண்டுவீசிய அஜித்குமாரவும் போட்டி

கொழும்பு, ஜூலை 21

இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தானதை அடுத்து, நாடாளுமன்றத்தில் குண்டுத் தாக்குதல் நடத்திய சம்பவத்தில் முதலாவது எதிரியாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஜித்குமார, எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆரிய புலேகொட தலைமையிலான இலங்கை முற்போக்கு முன்னணியின் வேட்பாளராக இவர் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடுகிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜே. வி. பியின் தலைமையிலான தேசிய மீட்பு முன்னணியின் முதலாவது பிரசாரக் கூட்டம் அண்மையில் நுகேகொடையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அஜித் குமாரவும் கலந்து கொண்டு பேசினார். (இ-எ)

# விளையாட்டு நிகழ்வுகள்

நாவலன் மார்க்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் பாரதி சுற்றுக்கேடயத்துக்காக நடத்தும் "செற்-அப்" முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் கால் இறுதியாட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ மட்டுவில் மோகனதாஸ் வி.க "ஏ" எதிர் அச்சுவேலி ஸ்ரீ விக்னேஸ்வரா வி.க

★ யாழ் ஐங்கரன் வி.க. எதிர் ஆவரங்கால் மத்திய வி.க.

★ ★ ★

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 39 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி மின்னொளி விளையாட்டுக் கழகம் யாழ்மாவட்ட ரீதியில் நடத்தி வரும் "செற்-அப்" முறையிலான கரப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி — பாசையூர் அன்ரன் வி.க "ஏ" அணி எதிர் மட்டுவில் வளர்மதி வி.க. 'ஏ' அணி.

★ பிற்பகல் 4 மணி — அச்சுவேலி நவோதயா வி.க. 'ஏ' அணி எதிர் அரியாலை ஐக்கிய வி.க. 'ஏ' அணி.

★ ★ ★

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி திருவாளர்கள் பொ.தர்மு, வை. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் நினைவாக கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திவரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று இரவு 7 மணி முதல் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ இமையாணன் கலைமகள் வி.க எதிர் சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க

★ சிறுப்பிட்டி உதயதாரகை வி.க எதிர் புத்தூர் வளர்மதி வி.க.

★ ★ ★

யாழ் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள காட்சி உதைபந்தாட்டப்போட்டி ஒன்றுஇன்று பிற்பகல் 4 30 மணிக்கு மருதடி துவபிட மைதானத்தில் நடைபெறவுள்ளது. அந்த ஆட்டத்தில் யாழ் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியும், பாசையூர் சென் அன்ரனீஸ் வி.க அணியும் மோதவுள்ளன

யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. பரமேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்,

★ ★ ★

யாழ் ஆஸ்பத்திரி கிரிக்கெட் குழுவும், வை. எம். எச். ஏ. விளையாட்டு குழுவுக்கும் இடையிலான ஒருநாள் மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளை முற்பகல் 9 மணிக்கு கோண்டாவில் ராமகிருஷ்ணர் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ் ஜெயப்பூர் செயற்கைக் கால் திட்ட நிறுவனத்தின் ஏழாம்ஆண்டு நிறைவை ஒட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் விளையாட்டு விழா ஒன்று நடைபெறவுள்ளது. விழாவில் பிரதம விருந்தினராக செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் யாழ் அலுவலக அதிகாரி செல்வி மேரி பேர்கின்ஸ் கலந்து கொள்வார். (ஐ-17-152)

## பரீட்சை முடிவுகள் வெளியாகின

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா 1992 — 1993 ஆம் ஆண்டுக்கான பகுதி I பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி போதனைநெறியின் யாழ் இந்துமகளிர் நிலையத்தின் இணைப்பாளர் ரீ. கமலநாதன் இப்பரீட்சை முடிவுகளை கொழும்பிலிருந்து எடுத்து வந்துள்ளனர்.

பரீட்சை முடிவுகளை யாழ் இந்துக் கல்லூரி மற்றும் யாழ் இந்து மகளிர் கல்லூரி நிலையங்களில் அந்தந்த நிலையங்களைச் சேர்ந்த பயிலுநர்கள் நாளை காலை பார்வையிடலாம் என்று திரு கமலநாதன் தெரிவித்தார். (உ)

தெற்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்செயலின் போது தீவிரவாத பௌத்த பிக்குகளும் கொல்லப்பட்டனர் — என்றுவண. மதுலுவவ சோபித தேரர் சொன்னார்.

1987 இல் இந்திய — இலங்கை உடன்படிக்கையை எதிர்த்த வண. சோபித தேரர் —

மாகாணசபைகளுக்குக் கூடுதல் அதிகாரங்களை அரசு வழங்கி, தமிழர்களுக்கு எதிரான அநீதிகளை களைய வேண்டும்"— என்றும் தெரிவித்தார்,

சிறுபான்மையினத்தவருக்கு எதிராக சிங்களத் தேசிய உணர்வுகளை இப்பௌத்த மத குருமார்கள் எப்போதும் தூண்டிவிட்டே வந்துள்ளனர் — என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அரசியல் விஞ்ஞானி ஜயதேவ உயன்கொட தெரிவித்தார்.

தமிழருடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் கிழித்தெறியப்படுவதற்கு பௌத்த மத குருமாரின் அழுத்தங்கள் தான் காரணமாக அமைந்துள்ளன.

சிங்களவர் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்களைச் சேர்ந்த 106 பௌத்த மத குருமார்கள் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான சர்வமத இயக்கம் ஒன்றை உருவாக்க ஒப்புக்கொண்டனர்.

— இவ்வாறு கண்ணோட்டம் ஒன்றில் தெரிவிக்கப்படுகிறது. (அ-எ)

# இவர்கள் பற்றி தகவல் தருக!





தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபட்ட பொதுநபர்கள் மூவர் குறித்து தகவல் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் முறைப்பாடுகளை அடுத்து கைது செய்யப்பட்டுள்ள இம்மூவரும் விடுதலைப் புலிகளின் விசாரணையில் உள்ளனர்.

இவர்கள் பற்றி மேலதிகமாகத் தகவல்கள் தெரிந்திருப்பின், கடிதம் மூலமோ அல்லது நேரிலோ செய்தித் தகவல் மையம், கோப்பாய், சந்தி, கோப்பாய் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

முதலாவது நபர் திருவிளங்கன் வாசுதேவன் (முகுந்தன்) வயது 18. முகவரி: 16/16, வளன்புரம், கொழும்புத்துறை

இரண்டாவது நபர்: டேவிற் ராஜ்குமார் (ரவி) வயது 20 தொழில்: நகைத்தொழில் முகவரி: வவுனியா பூவரசங்குளம், இராசயன்கல் அர்சா அடை. மற்றொரு முகவரி சிலர் நகர் [88] நாவற்குழி

மூன்றாவது நபர்: தர்மலிங்கம் ஜெகநாதன் (லிங்கம்/ முரளி] வயது 18 முகவரி: நாயன்மார்கட்டு, தம்பலகாமம். (ஒ

## யாழ். மத்திய கல்லூரி தரமுயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 21

கடந்த ஜூன் 23 ஆம் திகதி முதல் யாழ் மத்திய கல்லூரியும் தேசியக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது.

இது தொடர்பான கடிதம் நேற்று யாழ். மத்திய கல்லூரிக்குக் கிடைத்துள்ளதாகத் தெரியவந்தது.

யாழ் மாவட்டத்தில் யாழ் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர், கல்லூரி சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியன ஏற்கனவே தேசியக் கல்லூரிகளாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன என்பது தெரிந்ததே. [உ]

## 26 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தம்

கொழும்பு ஜூலை 21

நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் கல்விசார் பணியாளர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கென ஓய்வூதியத் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கை குறித்து அரசு அலட்சியமாக இருப்பதைக் கண்டித்து இவ்வேலை நிறுத்தம் நடத்தப்படவிருப்பதாக அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற்சங்கப் பேரவையின் உப தலைவர் டீ.பி. வொச்சு கமகே தெரிவித்தார்.

ஓய்வூதியத் திட்டம் குறித்து ஒரு மாதத்தினுள் முடிவு செய்வதாகக் கூறிய அரசு இரண்டு மாதங்கள் கழிந்த பின்னரும் மௌனமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ-எ-6)

## உதவிப் பணம் வழங்கல்

குருநகர், ஜூலை 21

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் வழங்கப்படும் ஜூன் மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப் பணமும் மற்றும் தொழுநோய், புற்றுநோய், காசநோய் ஆகிய நோயாளர்களுக்கான உதவிப் பணமும் தற்பொழுது சுழிபுரம் தபாலகத்திலுள்ள காரைநகர் கிளை அஞ்சலகத்திலும், யாழ்ப்பாண தபாலகத்திலுள்ள ஊர்காவற்றுறை கிளையிலும், கைதடி அஞ்சலகத்திலும் விடத்தல்பளை மற்றும் வண்ணார்பண்ணை உப அஞ்சலகங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன. (க-51)

தேர்தல்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறது.

தீவுப்பகுதிகளின் பாதுகாப்பு நிலவரம் மதிப்பீடு செய்யப்பட்டு தேவை ஏற்படும்போது பொலிஸாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. கனகரத்தினம் தெரிவித்தார். [உ-எ]

வல்வெட்டி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய சமயம் பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவர்கள் இடையில் பாடசாலைகளை விட்டு வெளியேறிப் பாதுகாப்பு தேடிச் சென்றனர். (ஓ-உ-155-173-15)

## மெய்வல்லுநர் பரீட்சை

மெய்வல்லுநர்சட்டவிதிகளில் தேர்ச்சி பெற்றோரைத்தெரிவு செய்வதற்கான பரீட்சைகளை யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் எதிர்வரும் ஆகஸ்ட் 14 ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரியில் நடத்த உள்ளது. அன்றைய தினம் காலை 9 - 30 மணி முதல் பிற்பகல் 1 - 00 மணி வரை இப்பரீட்சைகள் நடைபெறும்

## தவறிவிட்டது

16 - 07 – 1994 சனிக்கிழமை கிளாலிப் படகுப் பிரயாணத்தின் போது மிகவும் முக்கியமான ஆவணங்களும், செபப் புத்தகங்களும் அடங்கிய சிறிய பொதி பொன்று தவறிவிட்டது. இந்த ஆவணங்கள் முக்கியமானதும் உடனடியாகத் தேவைப்படுவதாலும், கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாராவது ஒரு கத்தோலிக்க குருவானவரிடம் அல்லது யாழ்: ஆயர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

BRO. டலிமா
(32086) மடுத் தேவாலயம்

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### கணபதிப்பிள்ளை தையல்நாயகி

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிரவுண் வீதி 144/5 இல் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை தையல்நாயகி நேற்று (20-7-94) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (முன்னாள் வர்த்தகர் பண்டாரவளை) யின் அன்பு மனைவியும்' இராசரத்தினம், காலஞ்சென்ற இரத்தினராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானேஸ்வரி, புனிதவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை (21-7-94) முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்;

தகவல்:
க. இராசரத்தினம்
(மகன்)

144/5, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம். (32030)

### திருமதி புவனேஸ்வரி கந்தையா

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி கந்தையா 20-07-1994 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகநாதர் - மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும், திருமதி தி கேதாரகௌரி (இளைப்பாறிய ஆசிரியை யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), காலஞ்சென்ற ஓங்காரநாதன், காலஞ்சென்ற திருமதி ப. இராஜஇராஜேஸ்வரி (ஆசிரியை), நாகேஸ்வரன் (திருகோணமலை), சிவராஜகுரியர் [அமெரிக்கா), பிறைசூடி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr. இராஜரட்ணம், Dr பரராஜசிங்கம், திருமதி நா. சியாமளா (ஆசிரியை, கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயம்) திருமதி சி வசந்தராணி (அமெரிக்கா) திருமதி பி. சரோஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற மனோன்மணி, காலஞ்சென்ற குணபாலலட்சுமி மற்றும் பாலசிங்கம் (இளைப்பாறிய அதிபர்), திருமதி பா. கமலாம்பிகை (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி க. இருபாலினி (கனடா), குமரேசன் (கனடா], மஞ்சுளா, வரதப்பிரியா. பார்த்தாமன், சுதா, பார்த்திபன், சங்கீதா, திலீபன், சுபிதா (அமெரிக்கா), தனுஜா (அமெரிக்கா), கபில் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனித்தா (கனடா) வின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21 - 07 -94) மாலை 4 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
க. நாகேஸ்வரன்
(மகன்)

19/2, பி.ஏ. தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (32039)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21-07-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.